வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com  மலர் : 06  10. 02. 2025 திங்கட்கிழமை  இதழ் : 42  பக்கங்கள் : 12




# நாடு முழுவதும் நேற்று திடீரென்று மின் தடை!

## குரங்கே காரணம் என்கிறார் அமைச்சர்

கொழும்பு, பெப்ரவரி 10

**பாணந்துறை உப மின் கட்டமைப்பில் ஏற்பட்ட திடீர் மின் தடை காரணமாக நாடு முழுவதும் நேற்று முற்பகல் 11 மணி முதல் மாலை 4 மணி வரை திடீர் மின் விநியோகத்தில் தடை ஏற்பட்டது.**

பாணந்துறை கிரிட் துணை மின் நிலையத்துடன் குரங்கு மோதியதால் நாடளாவிய ரீதியில் மின் தடை ஏற்பட்டது என்று மின்சக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தால் நாடு முழுவதும் மின்சார விநியோகம் பாதிக்கப்பட்டது என்றும், மின் விநியோகத்தில் பாரிய இடையூறு ஏற்பட்டது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பாணந்துறை உப மின் கட்டமைப்பில் ஏற்பட்ட பிரச்னையால், தேசிய மின்சார விநியோக அமைப்பில் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வுடன் இணைந்து நாடு முழுவதும் மின்

11

### மின் தடைக்கான காரணம் இன்று அறிவிக்கப்படுமாம்!

கொழும்பு, பெப். 10

நாடு முழுவதும் நேற்று ஏற்பட்ட மின் தடை தொடர்பான விரிவான தகவல்களை இலங்கை மின்சார சபை இன்று வெளியிடும் என்று அதன் தலைவர் கலாநிதி திலக் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

மேலும், இந்த சம்பவம் குறித்து மின்சார சபையின் உள்ளக குழு ஊடாக விசாரணை நடத்த உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில், இந்த சம்பவம் குறித்து மின் சக்தி அமைச்சும் விரிவான விசாரணையை நடத்தி வருவதாக அமைச்சின்

11

## மின்தடை குறித்து அறிக்கை கேட்கும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

கொழும்பு, பெப். 10

நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட மின்தடை தொடர்பில் அறிக்கை கோருவதற்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

குறித்த அறிக்கையின் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, தேசிய மின்கட்டமைப்பு வழமைக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

## நுரைச்சோலை மின் நிலையத்திலும் மூன்று இயந்திரங்கள் செயலிழப்பு!

கொழும்பு, பெப். 10

நுரைச்சோலை லக்விஜய நிலக்கரி மின்னுற்பத்தி நிலையத்தின் 3 மின்னுற்பத்தி இயந்திரங்களும் செயலிழந்துள்ளன.

திடீர் மின் விநியோகத் தடை காரணமாக

11

## யாழ். நகரில் இளைஞரை கடத்தி ரூ. 80 இலட்சம் பணம் அபகரிப்பு

### நான்கு சந்தேக நபர்கள் கைது

யாழ்ப்பாணம், பெப். 10

யாழ். நகரில் இளைஞர் ஒருவரைக் கடத்திச் சென்று 80 இலட்சம் ரூபாய் பணத்தை அபகரித்த கும்பலைச் சேர்ந்த நான்கு பேர் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் குற்றத் தடுப்பு விசாரணைப் பிரிவு பொலிஸாரால் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

வெளிநாடு செல்வதற்காக ஆசைப்பட்ட இளைஞரொருவரிடம் 80 இலட்சம் ரூபாய் வரையான பணத்தை வங்கியில் வைப்பிலிட்டு வங்கி அறிக்கையை நேரடியாக வந்து தமக்கு

11

## தமிழரசு வழக்கை முடிவுறுத்தும் முன்மொழிவுகள் நீதிமன்றுக்கு!

கிளிநொச்சி, பெப். 10

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு எதிராகத் திருகோணமலை நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை இணக்கப்பாட்டுடன் முடிவுக்குக் கொண்டு வருவது தொடர்பான முன்மொழிவுகளை நீதிமன்றுக்கு சமர்ப்பித்துள்ளதாக அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

குறித்த வழக்கின் பிரதிவாதிகளான தாம் உள்ளிட்ட மூன்று பேரினால் கடந்த 7ஆம் திகதி இந்த முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த அடிப்படையில் எதிர்வரும் 13ஆம்

11

## சிரேஷ்ட தமிழ் ஊடகவியலாளர் இராஜநாயகம் பாரதி காலமானார்



யாழ்ப்பாணம், பெப். 10

சிரேஷ்ட ஊடகவியலாளரும் ஈழநாடு பத்திரிகையின் முன்னாள் ஆசிரியருமான இராஜநாயகம் பாரதி தனது 62 ஆவது வயதில் நேற்று யாழ்ப்பாணத்தில் காலமானார்.

சுமார் 40 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட ஊடகத்துறை அனுபவத்தைக் கொண்ட இராஜநாயகம் பாரதி தினக்குரல்

11

## உள்ளூராட்சி தேர்தல் குறித்து அரசியல் கட்சிகளுடன் பேச்சு

### தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர்

கொழும்பு, பெப். 10

மாகாண சபைத் தேர்தல் குறித்து அரசியல் கட்சிகளுடன் பேச்சில் ஈடுபடவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு புதிதாக

11

## கிளிநொச்சி ரயில் நிலையத்துக்கு அமைச்சர் பிமல் ரத்நாயக்க விஜயம்




கிளிநொச்சி, பெப். 10

கிளிநொச்சிக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட அமைச்சர் பிமல் ரத்நாயக்க கிளிநொச்சி ரயில் நிலையத்துக்கு சென்று நிலையத்தின் நிறை குறைகளை

11

## இலங்கைக்கு வருகின்றது சீனாவின் உயர்மட்ட குழு

கொழும்பு, பெப். 10

தேசிய இன விவகார ஆணையகத்துக்குப் பொறுப்பான சீன அமைச்சர் பான் யூ தலைமையிலான உயர்மட்ட சீனக் குழு எதிர்வரும் 19 முதல் 23 வரை இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளது.

இதன்போது, இன நல்லிணக்கம் மற்றும் நல்லிணக்க முயற்சிகள் தொடர்பான தலைப்புகளில் தூதுக்குழுவின் தலைவரான அமைச்சர் பான் யூ, இலங்கை அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவார் என்று வெளியுறவு அமைச்சக தரப்புக்கள்

11

## பாலச்சந்திரன் உயிரிழந்த செய்தி கேட்டு மிகுந்த மனவருத்தம் அடைந்தார் மகிந்த!

### கூறுகிறார் நாமல் ராஜபக்ஷ எம்.பி.

கொழும்பு, பெப். 10

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரன் உயிரிழந்த செய்தி கிடைத்தபோது, முன்னாள் ஜனாதிபதியும் தனது தந்தையுமான மகிந்த ராஜபக்ஷ மிகுந்த மனவருத்தத்துக்கு உள்ளானார் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சமூக ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் இதுகுறித்து கூறினார்.

"பிரபாகரனின் மகன் சிறுவன் பாலச்சந்திரன் போரில் தொடர்புடையவர் அல்லர். ஆனால்,

11

## தமிழ் மக்களின் பிரதான எதிர்பார்ப்பு தேசிய பிரச்னைக்கு தீர்வு காண்பதே!

கொழும்பு, பெப். 10

வடக்கு - கிழக்கில் உள்ள மக்களின் பிரதான எதிர்பார்ப்பு தேசிய பிரச்னைக்கு தீர்வு காண்பதாகும் என தேசிய சமதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெஹான் பெரேரா தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பு விடயத்தையும் பொருளாதார நெருக்கடிகளுக்கான தீர்வு விடயத்தினையும் சமநேரத்தில் முன்னெடுப்பதற்கான இயலுமை தற்போதைய அரசாங்கத்திடத்தில் காணப்படவில்லை என அவர் கூறினார்.

அரசாங்கம் பொருளாதார நெருக்கடிகள் தொடர்பில் முன்னுரிமை அளித்து கரிசனைகளை கொண்டுள்ளதென்று என அமைச்சர்

11

## பழைய பாணியிலேயே அநுரவின் அரசும் ஆட்சி

### சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 10

மக்கள் தீர்வுகளை எதிர்பார்த்து இவர்களை ஆட்சியில் அமர்த்தினாலும் பழைய பாணியிலேயே இவர்களும் ஆட்சியமைத்து வருகின்றனர். மக்கள் ஆணைக்கு நியாயத்தை நிலைநாட்ட முடியாது ஆட்சியிருந்து என்ன பயன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் அவிசாவளை தேர்தல் தொகுதி அமைப்பாளர் சுதத்

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டமா அதிபருக்கு அரசாங்கம் அழுத்தம்

## உதய கம்மன்பில குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 10

**அரசியல் பழிவாங்கலுக்காக அரசாங்கம் நீதிக்கட்டமைப்பையும் பயன்படுத்துகிறது. சட்டமா அதிபருக்கு அரசாங்கம் அழுத்தம் பிரயோகிப்பது தெளிவாக விளங்குகிறது. எதிர்வரும் காலங்களில் பலர் கைதாகலாம் என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.**



கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்ட தன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் மீதான மக்கள் நம்பிக்கை வெகுவாக சிதைவடைந்துள்ளது. அரசாங்கத்தின் மீது மக்களின் வெறுப்பு தீவிரமடையும் போது மக்களின் கவனத்தை திசைத்திருப்புவதற்காக கடந்த அரசாங்கத்துடன் தொடர்புடைய விடயங்களை அரசாங்கம் வெளியிடும்.

ஜனாதிபதி நிதியத்தில் இருந்து நிதி பெற்றவர்கள், மதுபானச்சாலை அனுமதிப் பத்திரம் பெற்றவர்கள் விவரத்தை அரசாங்கம் வெளியிட்டது.

தற்போது 2022 மே கலவரத்தின் போது வீடுகளை இழந்த அரசியல்வாதிகள் பெற்றுக் கொண்ட இழப்பீட்டுத் தொகை தொடர்பான விவரங்களை அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி நிதியத்தில் இருந்து நிதி பெற்றவர்களின் பெயர் விவரங்களை வெளியிட்ட அரசாங்கம் அந்த நிதியை மீளப் பெற்றுக் கொள்வதற்கு எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. அதேபோல் கடந்த அரசாங்கத்தில் மதுபானச்சாலை அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக் கொண்டவர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டன.

மதுபானச்சாலை அனுமதிப் பத்திரங்களை இரத்துச் செய்வதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்படுமா என கேள்வியெழுப்பியபோது அந்த மதுபானச்சாலை பத்திரங்கள் சட்ட ரீதியாக வழங்கப்பட்டுள்ளது. ஆகவே அதற்கு எதிராக நடவடிக்கை எடுத்தால் சட்ட சிக்கல் ஏற்படும் என சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க குறிப்பிடுகிறார்.

ஜனாதிபதி அநுரகுமார தேர்தல் பிரசார மேடைகளில் மதுபானச்சாலை அனுமதிப் பத்திரங்களையும், முன்னாள் ஜனாதிபதிகளுக்கான கொடுப்பனவை இரத்துச் செய்வதாகவும் குறிப்பிட்ட விடயங்கள் அனைத்தும் இன்று பொய்யாக்கப்பட்டுள்ளன.

மக்களை தூண்டிவிடுவதற்காக குறிப்பிட்ட விடயங்களை சட்டத்துக்கு முரணாக செயற்படுத்த முடியாது என்பதை அரசாங்கம் தற்போது விளங்கிக் கொண்டுள் ளது.

அரசியல் பழிவாங்கலுக்காக அரசாங்கம் நீதிக்கட்டமைப்பை பயன்படுத்திக் கொள்கிறது. அரசியல் பழிவாங்கலை முன்னிலைப்படுத்தி வழக்குத் தாக்கல் செய்யப்படுகின்றன. சட்டமா அதிபருக்கு அரசாங்கம் அழுத்தம் பிரயோகிப்பது தெளிவாக விளங்குகிறது. எதிர்வரும் காலப்பகுதியில் பலர் கைதாகலாம்- என்றார். (அ)

# எரிவாயு விலை திருத்தத்துக்கான நிதி அமைச்சின் அனுமதி தாமதம்

கொழும்பு, பெப். 10

பெப்ரவரி மாதத்திற்கான எரிவாயு விலை திருத்தத்துக்கு நிதி அமைச்சின் அனுமதி இதுவரை கிடைக்கவில்லை என லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

எரிவாயு விலை திருத்தம் தொடர்பான பரிந்துரைகள் இந்த மாதத்தின் முதல் வாரத்தில் நிதி அமைச்சகத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக சந்தை எரிவாயு விலைக்கேற்ப நாட்டின் எரிவாயு விலைகள் மாதந்தோறும் திருத்தப்பட்டு, ஒவ் வொரு மாதமும் 4 ஆம் திகதி அறிவிக்கப்படும் இருப்பினும், பெப்ரவரி மாதத்திற்கான எரிவாயு விலை திருத்தம் இதுவரை அறிவிக்கப்பட வில்லை.

உலக சந்தையில் எரிவாயு விலை அதிகரித்த போதிலும், மக்களை கருத்திற்கொண்டு கடந்த சில மாதங்களாக, எரிவாயு விலையில் எந்தவொரு மாற்றமும் மேற்கொள்ளப்படவில்லையென லிட்ரோ நிறுவனம் அறிவித்தது.

தற்போது பெப்ரவரி மாதத்திற்கான எரிவாயு விலையிலும் எந்த மாற்றமும் ஏற்படாது என லாப்ஸ் எரிவாயு நிறுவனத்தின் தலைவர் டபிள்யூ.கே.எச்.வேகபிட்டிய தெரிவித்தார். (அ)

# பாடசாலை அதிபரைக் கடத்திச் சென்று தாக்கி காயப்படுத்திய ஆசிரியர் உட்பட இருவர் கைது!

கொழும்பு, பெப். 10

கம்பஹா, பியகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சியம்பலாபே பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றிற்கு அருகில் பாடசாலை அதிபர் ஒருவரை ஜீப் வாகனத்தில் கடத்திச் சென்று வீடொன்றில் அடைத்து வைத்து, தாக்கி காயப்படுத்தியதாக கூறப்படும் ஆசிரியர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பியகம பொலிஸார் தெரிவித்தனர்.

பியகம பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

37 வயதுடைய ஆசிரியரும் 32 வயதுடைய பெண்ணொருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாடசாலை அதிபரும் கைது செய்யப்பட்ட ஆசிரியரும் ஒரே பாடசாலையில் கடமையாற்றுவதாகவும் முன்விரோதம் காரணமாக இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான விசாரணைகளை பியகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நீரில் மூழ்கி இருவர் பலி!

கொழும்பு, பெப். 10

கஹவத்தை மற்றும் முந்தல் பகுதிகளில் இரண்டு பேர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

கஹவத்தை, வெலேகே பொல பகுதியில் உள்ள கல்பில்ல அமுன பகுதியில் உள்ள அணையில் விழுந்து ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் கொடகவெல பகுதியைச் சேர்ந்த 45 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நபர் மது அருந்திவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த போது இந்த விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, முந்தல் கருங்காலிச்சோலை குளத்தில் மூழ்கி ஒருவர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் முந்தலம் பகுதியைச் சேர்ந்த 48 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இறந்தவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்பது தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# கிளிநொச்சி வைத்தியசாலையில் சேவைகள் மின்தடையால் பாதிப்பு

கிளிநொச்சி, பெப். 10

மின்தடையால் கிளிநொச்சி வைத்தியசாலையின் சேவைகள் பாதிக்கப்பட்டதாகவும் இதனால் நோயாளர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

நாடளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள மின் தடை காரணமாக கிளிநொச்சி பொது வைத்தியசாலையிலும் மின் தடை ஏற்பட்டது. அங்கு மின்பிறப்பாக்கியும் இயங்காத நிலையில் பல்வேறு சிகிச்சைப் பிரிவுகள் பாதிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

நோயாளர் விடுதி உள்ளிட்ட சிகிச்சைக்காக தங்க வைக்கப்பட்டுள்ள மக்களும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், புதிதாகக் கொண்டு வரப்பட்ட மின்பிறப்பாக்கியும் பொருத்தப்படாத நிலையில் வைத்தியசாலையின் பல்வேறு சேவைகள் தடைப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

# பொதுப் போக்குவரத்தில் டிஜிற்றல் தொழிநுட்பம் மூலம் கட்டண முறை

கொழும்பு, பெப். 10

பொதுப் போக்குவரத்தில் டிஜிற்றல் தொழிநுட்பம் மூலமான கட்டண முறையை அறிமுகப்படுத்த உள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பணப் பயன்பாட்டைக் குறைத்து, பயணிகளுக்கு வசதியை வழங்குவதே இதன் நோக்கமாகும்.

வங்கி அட்டைகள் மூலமாகவும் பணத்தைச் செலுத்தலாம்.

இதன்படி, எதிர்காலத்தில் ஒவ்வொரு பஸ்ஸுக்கு டிஜிற்றல் தொழிநுட்பம் மூலமான கட்டண பயனச்சீட்டை பெற்றுக் கொள்வதற்கான உபகரணம் வழங்கப்படும் என்று மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# மீண்டும் கதிரை சின்னத்தில் களமிறங்கும் சுதந்திரக் கட்சி!

கொழும்பு, பெப். 10

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சுதந்திரக் கட்சி சார்பில் பொதுஜன ஐக்கிய முன்னணியில் கதிரை சின்னத்தில் களமிறங்கவுள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸநாயக்க தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி தேர்தலுக்கு முன்னர் கூறிய வற்றை இப்போது செயற்படுத்த முடியாது என்பதை நிலைநிறுத்தியுள்ளது எனத் தான் எண்ணுவதாக துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-கதிரைச் சின்னம் என்பது 17 வருடங்கள் எதிர்க்கட்சியிலிருந்து சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க 1994 ஆம் ஆண்டு மீண்டும் இந்த நாட்டுக்குப் பல அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்காக அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளப் பயன்படுத்திய சின்னமாகும். அந்த சின்னத்தையே இம்முறை நாங்கள் பயன்படுத்துகின்றோம்.

இலங்கையில் உள்ள அனைத்து பிரதேச சபைகளிலும் இந்த சின்னத்திலேயே எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றோம்.

தமிழ், சிங்கள, முஸ்லிம் என்ற பேதமின்றி அனைத்து மக்களும் ஒன்றிணைந்து மீண்டும் சுதந்திரக் கட்சி உள்ளிட்ட கூட்டணியிலேயே நாங்கள் போட்டியிடுகின்றோம்.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு வருகைத் தந்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

அனைவரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக உற்சாகத்தோடு காத்திருக்கிறார்கள். கடந்த தேர்தலில் நாட்டின் அனைத்து இன மக்களும் மிகப் பெரிய ஏமாற்றத்துக்கு ஆளாகியுள்ளார்கள்-என்றார். (அ)

# வெள்ளம் பாதித்த விவசாயிகளுக்கு அரசு 187 மில்லியன் ரூபாய் இழப்பீடு

கொழும்பு, பெப். 10

கடந்த வருடம் நவம்பர் மாதம் வெள்ளப்பெருக்கு காரணமாகப் பெரும்போகத் தில் ஏற்பட்ட பயிர்ச் சேதங்க ளுக்கு 184 மில்லியன் ரூபாய் இழப்பீடு வழங்கியுள்ளதாக கமநல மற்றும் விவசாயிகள் காப்புறுதி சபை தெரிவித்துள்ளது.

பொலனறுவை மாவட்டத்தில் பயிர் இழப்பீடு வழங்கும் பணி நிறைவடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

மீதமுள்ள மாவட்டங்களுக்கான பயிர் இழப்பீடு வழங்கும் பணிகள் இந்த மாத இறுதிக்குள் நிறைவு செய்யவுள்ளதாக அந்த சபையின் தலைவர் பேமசிறி ஜாசிங்க ஆரச்சி தெரிவித்துள்ளார்.

பொலனறுவை மாவட்டத்தில் 6239 விவசாயிகளுக்கு 114 மில்லியன் ரூபாய் பயிர் இழப்பீடும்,

முல்லைத்தீவு, வவுனியா மற்றும் திருகோண மலை பகுதிகளில் 3,272 விவசாயிகளுக்கு 70 மில்லியன் ரூபாய் இழப்பீடும் வழங்கப்பட்டுள்ளதாக அரசு குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
10. 02 .2025 திங்கட்கிழமை
பிலவ வருடம், தை 28

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அரசியலை நிறுவனமயப்படுத்துவதன் சாத்தியம்

தமிழ்த் தேசிய அரசியலை நிறுவனமயப்படுத்தும் விடயத்தில் தமிழ் கட்சிகள் தவறியிருக்கின்றன என்னும் ஒரு சிறுபான்மை வாதமுண்டு. இதேபோன்றுதான் தமிழ் மக்களை ஒரு தேசமாக திரட்டுதல் என்னும் கோஷமும் முன்வைக்கப்படுவதுண்டு. அரசியலை சமகால நிலையில் நோக்கத் தவறுகின்றபோதுதான் இவ்வாறான வாதங்கள் மேலெழுகின்றன.

ஈழத் தமிழ்த் தேசிய அரசியலை நிறுவனமயப்படுத்த முடியாது - ஏனெனில், அதற்கான தூரநோக்குள்ள தலைமை ஈழத் தமிழர்கள் மத்தியில் இல்லை. தூரநோக்கற்ற விடயம் ஒவ்வொன்றையும் புத்திபூர்வமாக நோக்கும் திறனற்ற தலைவர்கள் என்போர் மேலாதிக்கம் செலுத்தும் அரசியல் சூழலில், இவ்வாறான வாதங்கள் அனைத்துமே ஏட்டுச் சுரக்காய் போன்றதுதான். அது ஒரு போதும் செயல்பாட்டுக்கு உதவப் போவதில்லை.

தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டுதல் என்னும் கோஷத்துடன்தான், தமிழ் பொது வேட்பாளர் என்னும் நிலைப்பாடு தலைநீட்டியிருந்தது. ஆனால், அந்த முயற்சி படுமோசமான தோல்வியை சந்தித்திருந்தது. அனைத்துக் கட்சிகளையும் அதனை நோக்கி ஒன்றிணைக்க முடியவில்லை. அத்துடன், ஒன்றிணைந்த கட்சிகளைக்கூட ஓரணியாகப் பேணிப் பாதுகாக்க முடியவில்லை. முயற்சியை மேற்கொண்டவர்களில் ஒரு பகுதியினரே அனைத்தையும் குழப்பியடிக்கும் சதிச்சக்திகளாகவும் தொழில்பட்டனர். இதற்கு பலவாறான காரணங்களை குறிப்பிட்ட போதிலும்கூட, உண்மையான காரணம், தேசத்தைத் திரட்டப் போவதாகக் கூறிக்கொண்டவர்கள் மத்தியில் அதற்கான தலைமைத்துவ ஆற்றல் இருக்கவில்லை.

இன்று ஈழத் தமிழர் அரசியல் எதிர்கொண்டிருக்கும் அனைத்து நெருக்கடிக்கும் தலைமைத்துவ பிரச்னையே அடிப்படையான காரணமாகும். ஒரு வலுவான தலைமையின்றி முன்னெடுக்கப்படும் அனைத்து அரசியல் முன்னெடுப்புக்களுமே இறுதியில், இருப்பதையும் சிதைக்கும் பணியையே மேற்கொள்ளும். தமிழ் பொது வேட்பாளர் விவகாரம் இதற்கான ஆகப் பிந்திய சிறந்த உதாரணமாகும்.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் தமிழ்த் தேசிய அரசியல் என்பது இப்போது சூம் செயலியிலும் யூ-ரியூப் தளங்களிலும்தான் இருக்கின்றது. அதற்கு மேல் தமிழ்த் தேசிய அரசியல் என்பதற்கு எந்தவொரு செயல் வடிவமும் இல்லை. தமிழ்த் தேசிய அரசியல் தென்னிலங்கைக்கு நெருக்கடியான ஒரு விடயமாகவே முன்னர் இருந்தது. தென்னிலங்கைக்கு ஈழத் தமிழர் அரசியல் நெருக்கடியாக இருக்கும்போது மட்டும்தான், இலங்கைத் தீவில் ஈழத் தமிழர் அரசியலானது தமிழ்த் தேசிய அரசியல் என்னும் பெறுமதியை எட்ட முடியும். ஈழத் தமிழர் அரசியலுக்கு அரசியல் ரீதியில் வலுவானதொரு பெறுமதியும் உருவாக முடியும்.

ஆனால், தற்போதைய நிலையில் அவ்வாறானதோர் அரசியல் பெறுமதி ஈழத் தமிழர் அரசியலுக்கு இல்லை. இதனைப் புரிந்து கொள்ளாமல் முன்வைக்கப்படும் வாதங்கள் அனைத்தும் வெறும் புனைவுகளாகவே இருக்க முடியும்.

இந்த அடிப்படையில் சிந்தித்தால், ஈழத் தமிழரை ஒரு தேசமாகத் திரட்டுவது தமிழ்த் தேசிய அரசியலை நிறுவனமயப்படுத்துவது போன்ற சொற்கள் பெறுமதியற்றவை.

# "அவயவங்களை இழந்த மக்களுக்கு மறுவாழ்வு வழங்க விசேட திட்டம்"




*யாழ்ப்பாணம், பெப்.10*

யாழ். பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் கீழ் முப்பரிமாண தொழில் நுட்பத்தினூடாக வடக்கு - கிழக்கில் உள்ள அவயவங்களை இழந்த மக்களின் மறுவாழ்வை முன்னிறுத்தி விசேட திட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக திட்ட ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலையின் ஓய்வு நிலை பேராசிரியர் காசி விஸ்வநாதன் செல்வகுமார் மற்றும் கனடா - இலங்கைக்கான வர்த்தக சபையின் இணைப்பாளர் குலா செல்லத்துரை ஆகியோர் இதனைத் தெரிவித்தனர்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் அவர்கள் மேலும் கூறுகையில்,

"இந்தத் திட்டம் கடந்த 7 வருடங்களுக்கு முன்னர் மலேசிய நிறுவனம் ஒன்றால் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன் வரப்பிரசாதத்தை வன்னியில் அவயவங்களை இழந்து நாளாந்தம் பல்வேறு அவமானங்களையும் அசௌகரியங்களையும் எதிர்கொண்டுவருவோர் பெற்றுக்கொள்ளும் வகையில் முதற்கட்டமாக முன்னெடுக்கப்படுகின்றது.

இந்த முப்பரிமாண பொறிமுறையூடான அவயவங்களை பெற்றுக்கொள்ளும் பயனாளிகள் அதை எவ்வாறு பயன்படுத்திக் கொள்வது என்பது தொடர்பான பயிற்சி பட்டறை ஒன்றை இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் எதிர்வரும் மார்ச் மாதம் 5 ஆம் திகதிமுதல் 9 ஆம் திகதிவரை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் பங்கேற்க இலங்கையில் இருந்து 50 பேரை அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இதேநேரம், இந்த அவயவங்கள் முப்பரிமாண பொறிமுறையூடாக தயாரிக்கப்படுகின்றது.

ஆனாலும், இந்தத் தொழில் நுட்பம் இலங்கையில் இன்மையால் அதை இந்தியாவில் இருந்து முதற் கட்டமாக பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதன் பின்னர் இதை யாழ். பல்கலைக்கழக பொறியியல் பீடம் முழுமையாக மேற்கொள்ளும்.

இதே நேரம் இந்தத் திட்டமானது யுத்தத்தில் பாதிக்கப்படு அவயவங்களை இழந்தவர்களுக்கு மட்டுமல்லாது ஏனைய விபத்து மற்றும் நோய்களால் அவயவங்களை இழந்தவர்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" - என்றனர்.

(எ-05)

# வவுனியாவில் 350 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதி வழங்கிய சீனா



*வவுனியா, பெப்.10*

வவுனியாவில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட 350 குடும்பங்களுக்கு இலங்கைக்கான சீனத் தூதரகத்தால் உலர் உணவுப் பொருட்கள் அடங்கிய பொதி மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் வைத்து நேற்றுக் காலை வழங்கப்பட்டது.

சீனத்தூதரகத்தின் பிரதிப் பிரதானி சூ. யன் வெய் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் பி. ஏ. சரத்சந்திர, மேலதிக அரசாங்க அதிபர் தி. திரேஸ் குமார், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) ந. கமலதாஸன் மற்றும் சீனத் தூதரக அதிகாரிகள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் பங்கேற்றனர்.

சீனத் தூதரகத்தால் வட மாகாணத்தில் 2,470 குடும்பங்களுக்கு தலா ரூ. 6,490 பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்படவுள்ளன. (எ-10)


# அமிர்தலிங்கத்தின் சிலை திறப்பு விழா

*யாழ்ப்பாணம், பெப். 10*

முன்னாள் எதிர்க்கட்சி தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணி, இலங்கை தமிழ் அரசுக் கட்சிகளின் முன்னாள் தலைவருமான அமிர்தலிங்கம் அவரின் பாரியார் மங்கையர்க்கரசி ஆகியோரின் நினைவு இல்லம், உருவச்சிலை திறப்பு விழா நாளை புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு மூளாய் வீதியிலுள்ள அவர்களின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், இந்தியத் துணைத்தூதுவர் சாய் முரளி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. உறவினர்கள் வீடு தேடி வருவார்கள்.

**இடபம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள். வெளி வட்டாரத்தில் மதிப்பு கூடும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். குடும்பத்தாரின் விருப்பங் களை நிறைவேற்ற போராட வேண்டியிருக்கும். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**கடகம்**
அனாவசிய செலவுகளை குறைக்கப் பாருங்கள். திடீர் பயணங்கள் இருக்கும். குடும்பத்தில் சின்ன சின்ன வாக்குவாதங்கள் வந்து நீங்கும். சகோதர வகையில் அலைச்சல் உண்டு .

**சிம்மம்**
எதார்த்தமாக பேசிக்கவர்வீர்கள். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பழைய கட னில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள்.

**கன்னி**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர் நண்பர்கள் எதிர்பார்ப்புடன் பேசு வார்கள். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள்.

**துலாம்**
கணவன்- மனைவிக்குள் மனம் விட்டு பேசு வீர்கள். புதுமுடிவுகள் எடுப்பீர்கள். புதியவர்கள் நண்பர்களாவார்கள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். உடல் நிலை சீராகும்.

**விருச்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஒரு விஷயத்தை நினைத்து அதிகளவில் குழப்பம் அடைவீர்கள். நியாயத்தை பேசப் போய் பெயர் கெடும். வியாபாரத்தில் புது முதலீடுகளை தவிர்க்கவும்.

**தனுசு**
சகோதர வகையில் நன்மை உண்டு. விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள். மனைவி வழியில் மதிக்கப்படுவீர்கள். வேற்றுமதத்தவர் உதவுவார். எதிர்பாராத சந்திப்பு நிகழும்.

**மகரம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற் றுவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறி முகமாவார்கள். நெருங்கியவர்களுக்காக மற்ற வர்களின் உதவியை நாடுவீர்கள்.

**கும்பம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளின் தனித்திறமைகளை கண்டறி வீர்கள். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங் குவீர்கள். எளிதில் யாரையும் நம்பி ஏமாறாதீர்கள்.


**மீனம்**
கடந்த கால இனிய அனுபவங்களை நினை வுக்கூர்ந்து மகிழ்வீர்கள். தாய்வழி உறவி னர்களால் அலைச்சல் ஏற்படும். பணப்பற்றாக் குறையை சமாளிப்பீர்கள். புதுவேலை அமையும்.

# இ. போ. ச. வவுனியா சாலையினரின் பணிப்பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது

வவுனியா, பெப்.10

இலங்கை போக்குவரத்து சபை, வவுனியா சாலையின் பொறியியல் பகுதியினரால் முன்னெடுக்கப்பட்ட பணிப் பகிஷ்கரிப்பு போராட்டம் பேச்சுகளை அடுத்து கைவி டப்பப்பட்டது.

குறித்த சாலையின் பொறி யியல் பிரிவில் பணிபுரியும் ஊழியர்களுக்கு இரண்டு மாதங்களாக மேலதிக நேரக் கொடுப்பனவுகள் வழங்கப்ப டவில்லை என தெரிவிக்கப்படு கின்றது.



இதனையடுத்து நேற்றுக் காலை முதல் அவர்களால் பணிப்புறக்கணிப்புப் போராட் டம் முன்னெடுக்கப்பட்டது. இதனால், வவுனியா சாலையின் பேருந்துகள் சேவைகளை முன்னெடுக்கவில்லை.

இந்த நிலையில், சாலைக்கு சென்ற வன்னி மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினர் ம. ஜெக தீஸ்வரன், பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளுடன் பேச்சுகளில் ஈடுபட்டனர்.

இதன்போது, அவர்களுக் கான மேலதிக நேரக் கொடுப்ப னவை விரைவாக வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டது.

இதனையடுத்து போராட் டம் தற் காலிகமாக கைவிடப் பட்டது.

இதேவேளை, இந்த விவ காரம் தொடர்பில் எதிர்வரும் வாரம் போக்குவரத்து சபை யின் உயர் அதிகாரிகளுடனும் பேச்சுகள் முன்னெடுக்கத் தீர் மானிக்கப்பட்டுள்ளது. (எ-10)

# பெண்ணிடம் நூதன முறையில் பணம் கொள்ளை, ஒருவர் கைது

யாழ்ப்பாணம், பெப்.10

கடந்த சில தினங்களுக்கு முன்னர் வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாவடி பகுதியில் தனியாக வசித்து வந்த வயோதிபப் பெண் ஒருவரிடம் 50 ஆயிரம் ரூபாய் பணம் நூதனமான முறையில் கொள்ளையடிக் கப்பட்டது.

இது தொடர்பில் ஆனைக் கோட்டை - உயரப்பு லம் பகுதியைச் சேர்ந்த சந்தே கநபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி கொஸ்தாவின் கீழ் இயங்கும் பொலிஸ் குழுவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற் கான நடவடிக்கைகளை பொலி ஸார் மேற்கொண்டு வருகின்ற னர். (எ-05)

# வடக்கில் தென்னை மரத்தில் மட்டுமல்லாது ஏனைய பயிர்களிலும் வெள்ளை ஈ தாக்கம்!

யாழ்ப்பாணம், பெப்.10

தென்னை மரத்தில் மாத்திர மல்லாது ஏனைய விவசாயப் பயிர்களிலும் வெள்ளை ஈ தாக்கம் அவதானிக்கப்பட்டுள் ளது. அதனை உடனடியாக கட்டுப்படுத்துவதற்கான நடவ டிக்கைகளை ஆரம்பிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் பணிப்புரை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் விவசாயத்துறை யினர் மற்றும் மாவட்டச் செய லர்களுடன் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் வடக்கு மாகாணத்தில் தென்னை மரங் களில் வேகமாகப் பரவிய வெள்ளை ஈ தாக்கம் தற்போது மீண்டும் வரத் தொடங்கியுள் ளது. குளிரான காலநிலை கார ணமாக அதன் தாக்கம் குறைவ டைந்திருந்த நிலையில் தற் போது மீண்டும் அது பரவத் தொடங்கியுள்ளது என அதிகா ரிகள் சுட்டிக்காட்டினர்.

தென்னை மரத்தில் மாத்தி ரமல்லாது ஏனைய விவசாயப் பயிர்களிலும் அது பரவி வருவ தாக சுட்டிக்காட்டப்பட்டது.

விவசாய ஆராய்ச்சி திணைக் களத்தால் இதனைக் கட்டுப்ப டுத்துவதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்படுவதாக திணைக் களத்தின் மேலதிக பணிப்பா ளர் குறிப்பிட்டார். தென்னை மரங்களில் பரவும் வெள்ளை ஈ தாக்கத்தை தம்மால் கட்டுப்ப டுத்துவது சவாலானது எனவும் அதற்கு தென்னை பயிர்ச் செய்கை சபையின் உதவியைப் பெற்றுக் கொள்ளுமாறும் குறிப்பிட்டார். ஏனைய விவசாயப் பயிர்களில் பரவும் வெள்ளை ஈ தாக்கத்தை கட்டுப் படுத்த இரசாயன முறையைப் பின்பற்றுவதாகக் குறிப்பிட் டார். அதற்கான உதவிகளை வடக்கு மாகாண விவசாயத் திணைக்களம் ஊடாக வழங்கு வதாக, வடக்கு மாகாண பிரதம செயலர் இ. இளங்கோவன் இதன்போது உறுதியளித்தார்.

தென்னை பயிர்ச் செய்கை சபையினரையும், தென்னை பயிர்ச்செய்கை ஆராய்ச்சி அலகினரையும் அழைத்து விரைவில் சந்திப்பு நடத்தி இதனைக் கட்டுப்படுத்துவதற் கான செயல்பாட்டை துரித மாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் ஆளுநர் கூறினார். (எ-02)

தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட

# விகாரை பற்றி சிங்கள மாணவர்களுக்கு உண்மைகளை எடுத்துக்கூற வேண்டும்

யாழ்ப்பாணம், பெப். 10

யாழ். பல்கலைக்கழக மாண வர்கள் தமது சக மாணவர்க ளான சிங்கள மாணவர்களுக்கு தையிட்டியில் அமைக்கப்பட் டுள்ள சட்டவிரோத விகாரை தொடர்பான உண்மைகளை எடுத்துக்கூற வேண்டும் என தையிட்டி சட்டவிரோத விகாரை அமைந்துள்ள காணி களின் உரிமையாளர்களில்




ஒருவரான பாலசுப்பிரமணியம் பாஸ்கரன் தெரிவித்தார். யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகச் சந்திப்பின் போதே அவர் இவ் வாறு குறிப்பிட்டார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2025 ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் சில நிபந்தனைகளைப் பூர்த்தி செய்க!

## சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்து

கொழும்பு, பெப். 10

**தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் சில நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. இலங் கைக்கான விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் மூன்றாவது மீளாய்வு தொடர்பில் கடந்த நவம்பர் மாதம் இலங்கை அரசாங் கத்தை பிரிதிநித்துவம் செய்ய அதிகாரிகளுக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகளுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரை யாடலின்போது ஊழியர் மட்ட உடன்பாடுகள் எட்டப்பட்டன.**

இதன்போது 2025 ஆம் ஆண்டு வரவு - செலவு திட்டத்தின் உள்ளடக்கங்கள் குறித்து அவதானம் செலுத்தப்பட்டிருந்ததாக சர்வதேச நாணய நிதியத்தின் தொடர்பாடல் திணைக்களத்தின் பணிப்பாளர் ஜூலி கோசாக் குறிப்பிட்டார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கன்னி வரவு - செலவுத் திட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட உள்ளதுடன், மார்ச் மாதம் 21 ஆம் திகதி வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளது. இவ்வாறானதொரு நிலையிலேயே சர்வதேச நாணய நிதியத்தின் தொடர்பாடல் திணைக்களத்தின் பணிப்பாளர் ஜூலி கோசாக் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தின் கீழ் இலங்கை இன்னும் விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தில் உள்ளது. மேலும் இந்த மாத்தில் 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை இலங்கை அரசாங்கம் முன்வைக்க உள்ளது. இந்த வரவு - செலவுத் திட்டத்தில் நாணய நிதியத்தின் எதிர்பார்ப்புகள் அல்லது நிபந்தனைகள் எத்தகையதாக உள்ளது என்று கேள்வியெழுப்பியுள்ளீர்கள்.

2024 ஆம் ஆண்டு நவம்பர் 23 ஆம் திகதி இலங்கையில், சர்வதேச நாணய நிதியத்திற்கும் இலங்கைக்கும் இடையில் விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் மூன்றாவது மதிப்பாய்வு குறித்து பணியாளர் மட்ட ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது.

இதன் பிரகாரம் நாணய நிதியத்தின் நிர்வாகக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட சுமார் 333 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி இலங்கைக்கு கிடைக்கும். எவ்வாறாயினும் இந்த நிதியுதவிக்கான மேலதிக உறுதிப்பாடல்களுக்கான கலந்துரையாடல்கள் எதிர்வரும் வாரங்களில் நடைபெற உள்ளன.

இலங்கையின் மறுசீரமைப்பு நிகழ்ச்சி நிரல் பாராட்டத்தக்க விளைவுகளைத் ஏற்படுத்தியுள்ளது. 2024 ஆம் ஆண்டின் நான்காவது - மூன்றாவது காலாண்டில் நாட்டின் பொருளாதாரம் 5.5 சதவீதம் வளர்ச்சியடைந்தது.

2024 ஆம் ஆண் டின் நான்காவது காலாண்டில் சராசரி பணவீக்கம் இலக்கை விட மிகவும் குறைவாகவே உள்ளது. மேலும் 2024 ஆம் ஆண்டின் இறுதியில் சர்வதேச இருப்புக்கள் 6.1 பில்லியனாக அதிகரித்துள்ளது.

எனினும் 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை கருத்தில் கொள்ளும் போது, கடந்த நவம்பரில் எட்டப்பட்ட பணியாளர் நிலை ஒப்பந்துடன் தொடர்புபடுகிறது.

இதனை அடுத்த வாரங்களில் இடம்பெற கூடிய கலந்துரையாடல்களின் போது நிர்வாகக் குழுவின் ஒப்புதலுக்கு உட்படுத்தப்படும். எனவே விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்கும் வகையில், 2025 வரவு -செலவு திட்டத்தை சமர்ப்பது முக்கியமாகும்-என்றார். (அ)

# சட்டமா அதிபர் எடுத்துள்ள தீர்மானம் ஏற்புடையதல்ல!

## எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 10

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் சாரதி கடத்தப்பட்டார் என்பதை அனைவரும் அறிந்திருக்கும் நிலையில், அதனுடன் தொடர்புடைய சந்தேகநபர்களை விடுவிக்குமாறு சட்டமா அதிபர் கூறுவது பொருத்தமானதல்ல என ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பில் கல்கிசை நீதிவான் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்கில் சந்தேகநபர்களாகப் பெயரிடப்பட்டிருக்கும் பிரேம் ஆனந்த உடலாகம, தொன் திஸ்ஸ சிறி சுகதபால மற்றும் பிரசன்ன நாணயக்கார ஆகிய மூவரையும் அவ்வழக்கிலிருந்து விடுவிப்பதற்கு சட்டமா அதிபர் பாரிந்த ரணசிங்க சிபாரிசு செய்திருப்பது குறித்து கண்டனங்கள் வலுத்திருக்கின்றன.

இவ்வாறானதொரு பின்னணியில் குறித்தவொரு குற்றவியல் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் பொலிஸார் உள்ளிட்ட விசாரணை அதிகாரிகள், அவ்விசாரணை அறிக்கைகள் மற்றும் சாட்சியங்களை சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்க வேண்டும் எனச் சுட்டிக்காட்டிய எம்.ஏ.சுமந்திரன், அவற்றின் அடிப்படையில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபருக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதா, இல்லையா எனும் தீர்மானத்தை சட்டமா அதிபரால் மேற்கொள்ளமுடியும் எனத் தெளிவுபடுத்தினார்.

அதேபோன்று சட்டமா அதிபர் தனக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி தீர்மானங்களை மேற்கொள்ளும்போது, அதில் அரசாங்கம் தலையீடு செய்யக் கூடாது எனவும், மாறாக சட்டமா அதிபர் சுயாதீனமாக இயங்குவதை உறுதிசெய்ய வேண்டியது அவசியம் எனவும் வலியுறுத்தினார்.

இருப்பினும் சட்டமா அதிபரின் அண்மைய தீர்மானத்தைப் பொறுத்தமட்டில், லசந்த விக்ரமதுங்கவின் சாரதி கடத்தப்பட்டார் என்பதை அனைவரும் அறிந்திருக்கும் நிலையில், அதனுடன் தொடர்புடைய சந்தேகநபர்களை விடுவிக்குமாறு கூறுவது பொருத்தமானதல்ல என்றும் சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க கொல்லப்பட்டு 16 வருடங்கள் கடந்திருக்கும் நிலையில், இன்னமும் இவ்வழக்கில் எவ்வித முன்னேற்றமும் எட்டப்படவில்லை என விசனம் வெளியிட்ட அவர், இதுகுறித்த விசாரணைகளை விரைவுபடுத்தி, குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டியது அவசியம் என குறிப்பிட்டார். (அ)

# அரசியல் தீர்வைக் கைவிட்டால் நாடு பாதாளத்தில் தள்ளப்படும்

## தமிழ்த் தலைமைகள் அரசிடம் வலியுறுத்தல்

கொழும்பு, பெப். 10

தேசிய இனப்பிரச்னைக்கான தீர்வு காண்பதை மையப்படுத்திய அரசியலமைப்பு விடயத்தினை கைவிட்டு, பொருளாதார நெருக்கடிகளை மட்டும் அரசாங்கம் கையாளுமாக இருந்தால் நாடு மேலும் பாதாளத்துக்குள்ளேயே செல்லும் அபாயமுள்ளது என்று தமிழ்த் தலைவர்கள் அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பொருளாதார நெருக்கடிகளையும், அரசியலமைப்பு விடயத்தினை சமாந்தரமாக கையாளுவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கவேண்டியது அவசியமென்பதை கடந்தகால வரலாற்றில் இருந்து கற்றுக்கொண்டு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ அரசாங்கம் பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வினைக் கண்டதன் பின்னரேயே அரசியலமைப்பு விடயங்களை கையாளவுள்ளதாக அறிவித்துள்ளமை தொடர்பில் தமது நிலைப்பாடுகளை வெளிப்படுத்துகையிலேயே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்றக் குழுவின் தலைவரும், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறிதரன் தெரிவிக்கையில்-அரசியல் தீர்வினைக் காணாது பொருளாதாரத்தில் மீட்பெற முடியும் என்று அரசாங்கம் கருதினால் அது தவறானதொரு புரிதலாகும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வும், பொருளாதார மீட்சியும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்துள்ளன என்ற உண்மையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு இதயசுத்தியுடன் செயற்பட வேண்டும். அரசாங்கம், அரசியலமைப்பு விடயத்தினை காலதாமதப்படுத்துவதான அதன் மீதான சந்தேகத்தினை ஏற்படுத்துவதாக இருக்கின்றது. ஆகவே அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினையை இதயசுத்தியுடன் கையாள்வதாக இருந்தால் அரசியலமைப்பு விடயம் தாமதமின்றி முன்னெடுக்கப்பட வேண்டும்.

விசேடமாக, தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலான சமஷ்டி அடிப்படையிலான கோரிக்கையை நிறைவு செய்யும் வகையில் புதிய அரசியலமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டியது அவசியமாகும்-என்றார். (அ)

# அரச மாளிகையில் இருந்து வெளியேற மகிந்தவுக்கு இறுதி எச்சரிக்கை விடுப்பு!

கொழும்பு, பெப். 10

அரசாங்க மாளிகையிலிருந்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெளியேற வேண்டும் என்பதையே நாட்டு மக்கள் விரும்புகின்றனர் எனவும், எனவே, சட்ட நடவடிக்கைக்கு செல்வதற்கு முன்னர் அவர் வெளியேறினால் நல்லது எனவும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

முன்னாள் ஜனாதிபதிகள் மூவர், அரசாங்க வதிவிடங்களை கையளித்துவிட்டனர். இன்னும் மூவரே கையளிக்க வேண்டியுள்ளது. அவற்றை கையளிக்குமாறு அறிவித்து விட்டோம்.

எனவே, மனசாட்சியின் பிரகாரம் கௌரவமாக வெளியேறுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

ஆனால் முடிந் தால் வெளியேற்றுங்கள் என மஹிந்த ராஜபக்ச சண்டித்தனம் காட்டிக் கொண்டிருக்கின்றார். சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர், பொதுநிர்வாக அமைச்சிடம், அரச வீட்டை கையளித்துவிட்டு வெளியேறினால் சிறப்பு.

மகிந்த ராஜபக்ஷ வெளியேற வேண்டும் என்பதையே நாட்டு மக்களும் விரும்புகின்றனர். கடிதம்தான் வேண்டுமெனில் அதுவும் அனுப்பிவைக்கப்படும்-என்றார். (அ)

# மின் தடையால் ரயில் சேவை பாதிப்பில்லை

கொழும்பு, பெப். 10

நாடளாவிய ரீதியில் நேற்று ஏற்பட்ட மின் தடை காரணமாக ரயில் போக்குவரத்தில் எந்த இடையூறும் ஏற்பட வில்லை எனத் ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனினும், ரயில் நிலையங்களில் அறிவிப்புகளை வெளியிட முடியாததால், ரயில்களை அடையாளம் காண்பதற்கு பயணிகள் சிரமங்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது. (அ)

# 2.5 மில்லியன் தென்னை மரங்கள் பயிரிட திட்டம்!

கொழும்பு, பெப். 10

தென்னைப் பயிர்ச்செய்கையை விரிவுபடுத்துவதற்காக கப்ருக நிதி முகாமை சபை ஒன்றியம் மறுசீரமைக்கப்படும் என்று தெங்கு பயிர்ச்செய்கை சபை தெரிவித்துள்ளது.

அத்துடன் 2025ஆம் ஆண்டுக்குள் 2.5 மில்லியன் தென்னை மரங்களை பயிரிட தெங்கு பயிர்ச்செய்கை சபை திட்டமிட்டுள்ளது.

இந்த செயல்முறையின் முதல் திட்டம் கம்பஹா மாவட்டத்தில் எதிர்வரும் 17ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக அதன் தலைவர் வைத்தியர் சுனிமல் ஜயக்கொடி தெரிவித்தார்.

அதன்படி, கப்ருக கடன் திட்டத்திற்கு இணையாக, இந்த கப்ருக நிதி முகாமை சபை ஒன்றியம் மறுசீரமைப்பட்டு எதிர்காலத்தில் செயல்படுத்தப்படும் என்று அவர் கூறினார்.

2025ஆம் ஆண்டுக்குள் 2.5 மில்லியன் தென்னை மரங்களை பயிரிட தெங்கு பயிர்ச் செய்கை சபை திட்டமிட்டுள்ளது.

இவற்றில் ஒரு மில்லியன் மரங்கள் வடக்கு தென்னை முக்கோண வலயத்திற்கு அருகில் நடப்படும் என்று சுனிமல் ஜயக்கொடி தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொலை தொடர்பில் மூவர் கைது!

கொழும்பு, பெப். 10

இராஜகிரிய கொலைச் சம்பவம் தொடர்பாக மூன்று சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் வெலிக்கடை பொலிஸ் அதிகாரிகளால் ராஜகிரிய பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் 22, 24 மற்றும் 30 வயதான அகரபத்தனை, நமுனுகுல மற்றும் பன்னிலதென்ன பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஜனவரி மாதம் 6ஆம் திகதி, இராஜகிரியவில் உள்ள கடை ஒன்றுக்குள் அடையாளம் தெரியாத ஒருவர் விழுந்து கிடந்த நிலையில், பின்னர் அவரை வைத்தியசாலையில் அனுமதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனினும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

அந்த நபரின் சடலம் தொடர்பான பிரேத பரிசோதனை கொழும்பு தேசிய வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியால் நடத்தப்பட்டது.

இறந்தவரின் தலையில் உட்புற இரத்தப் போக்கு இருந்ததாகவும், அவரது உடலில் காயங்கள் இருந்ததாகவும் பிரேத பரிசோ தனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இந்த மரணம் ஒரு கொலை என்பது தெரியவந்துள்ளது. (அ)

## நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவை மீளவும் நிறுவும் பணிகள் ஆரம்பம்!

### அமைச்சர் ஆனந்த விஜேபால



கொழும்பு, பெப். 10

**நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவை மீளவும் நிறுவுவதற்கான ஆரம்ப கட்ட பணிகள் தற்போது இடம்பெற்று வருவதாகப் பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.**

இது தொடர்பான விதிமுறைகள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிகளை மேலும் திறம்படச் செய்யும் நோக்கில், அந்த திணைக்களத்தின் கீழ், நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு நிறுவப்படும் எனவும் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால கூறினார். (அ)

## கட்டுநாயக்க விமான நிலையத்தை மறுவடிவமைப்பு செய்ய தீர்மானம்

கொழும்பு, பெப். 10

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக, பயணிகள் வருகை தரும் பிரதான பகுதியைக் குறிப்பிடத்தக்க அளவில் மறுவடிவமைப்பு செய்ய தீர்மானித்துள்ளது.

நெரிசலைக் குறைக்கத் தானியங்கி பணம் செலுத்தும் இயந்திரங்களின் எண்ணிக்கையை இடமாற்றம் செய்தல் மற்றும் அதிகரித்தல், மிகவும் விசாலமான மற்றும் வரவேற்கத்தக்கச் சூழலை உருவாக்கப் பயணிகள் வருகை தரும் பிரதான பகுதியை விரிவுபடுத்துதல், சுற்றுலாப் பயணிகளுக்கு உதவ ஒரு மைய பயணத் தகவல் வழங்கும் பிரிவை நிறுவுதல் ஆகியவை மேற்கொள்ளப்படும்.

புதிய மறுவடிவமைப்பில் காத்திருப்பு நேரத்தைக் குறைக்கத் தானியங்கி பணம் செலுத்தும் இயந்திரங்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு மற்றும் இலங்கை சுற்றுலா பயணத் தகவல் வழங்கும் பிரிவைப் பிரதான மைய இடத்திற்கு மாற்றுதல் ஆகியவை உள்ளடங்கும்.

இது சுற்றுலாப் பயணிகளை அன்புடன் வரவேற்கப்படுவதையும் வருகையின் போது உதவப்படுவதையும் உறுதி செய்யும் என்று விமான நிலையத் தலைவர் ஹர்ஷ அபேவிக்ரம கூறினார்.

இந்த நடவடிக்கைகள் 2028 ஆம் ஆண்டு மார்ச்சில் 2 ஆவது முனையம் நிறைவடையும் வரை, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பயணிகள் அனுபவத்தை மேம்படுத்துவதற்கும் அதிகரித்து வரும் பயணிகளின் எண்ணிக்கையை நிர்வகிப்பதற்கும் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் மேற்கொண்ட முயற்சிகளின் ஒரு பகுதியாகும்.

2024 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டில், இலங்கை சுற்றுலாப் பயணிகளின் வருகையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் கண்டுள்ளது, மேலும் 2025 ஆம் ஆண்டு வரை அந்த அதிகரிப்பு தொடர்கிறது.

இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில், நாளாந்த வருகைகள் சராசரியாக 8,150 ஆக இருந்தன, இது கடந்த ஆண்டு ஜனவரியில் 6,700 ஆக இருந்ததை விட 23% அதிகமாகும். குறைந்த இடவசதி மற்றும் போதுமான தானியங்கி பணம் செலுத்தும் இயந்திரங்கள் இல்லாததால் வருகை தரும் பிரதான பகுதியில் நெரிசல் ஒரு சவாலாகவே உள்ளது.

சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு விஜயம் செய்ததைத் தொடர்ந்து, பயணிகளின் எண்ணிக்கையைச் சிறப்பாகச் சமாளிக்கப் பிரதான பகுதியை மறுவடிவமைப்பு செய்து விரிவுபடுத்துவதற்கான திட்டங்களைத் தொடங்கியுள்ளதாக அதன் தலைவர் கூறினார். (அ)

## சுகாதாரத் துறையில் நிலவும் வெற்றிடங்கள் நிரப்பப்படும்!

கொழும்பு, பெப். 10

சுகாதாரத் துறையில் நிலவும் வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்கு அடுத்த மாதத்திற்குள் நடவடிக்கை எடுக்கப்படும் எனச் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பேராதனை போதனா வைத்தியசாலையின் புதிய பிளாஸ்ரிக் அறுவை சிகிச்சைப் பிரிவைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-தற்போது சுகாதாரத் துறையில் ஏற்பட்டுள்ள பணியாளர்களின் பற்றாக்குறை காரணமாக வைத்தியசாலைகளை நடத்திச் செல்வதில் சிக்கல் நிலை தோற்றியுள்ளது.

கடந்த காலங்களில், ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படாமையும், நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாகப் பல வைத்தியர்கள் வெளிநாடு சென்றமையுமே இதற்கு வழிவகுத்த பிரதான காரணங்களாகும்.

சுகாதார சேவையைச் சிக்கல் இன்றி முன்னெடுத்துச் செல்வதற்கு சுமார் 2,800 விசேட வைத்தியர்கள் தேவைப்படுக்கின்ற போதிலும் நாட்டில் தற்போது 2,000 விசேட வைத்தியர்களே உள்ளனர்.

அத்துடன், 20,000 வைத்தியர்கள் தேவையாக உள்ள போதிலும், நாட்டில் தற்போது, சுமார் 17,000 வைத்தியர்களே உள்ளனர். சுகாதாரத் துறையில் நில வும் வெற்றிடங்களை நிரப்பு வதற்காக அடுத்த மாதத்திற்குள் 3,500 தாதியர்களையும் 976 குடும்பநல சுகாதார சேவை அதிகாரிகள் உள்ளிட்ட அவசி யமான பல சுகாதாரப் பணியா ளர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள் ளது.

அதேநேரம், கடந்த காலங்களில் நாட்டை விட்டு வெளியேறிய விசேட வைத்தியர்கள் உள்ளிட்ட சகல வைத்தியர்களும் மீண்டும் நாடு திரும்ப வேண்டும் கோரிக்கை விடுப்பதாகவும் அவர்களது சேவை நாட்டுக்கு அவசியமாகிறது-என்றார். (அ)

## 6 களஞ்சியசாலைகள் நேற்று முதல் திறப்பு

கொழும்பு, பெப். 10

நெல் சந்தைப்படுத்தல் சபைக்குச் சொந்தமான 36 களஞ்சியசாலைகள் தற்போது திறக்கப்பட்டுள்ளதாகவும், சதொசவுக்கு உரித்தான 6 நெல் களஞ்சியசாலைகள் நேற்று முதல் திறக்கப்பட்டுள்ளதாகவும், வர்த்தக, வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

அனுராதபுரம் பகுதியில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கடந்த காலங்களை விடவும் அதிகளவான உத்தரவாத விலையை தற்போதைய அரசாங்கம் வழங்கியுள்ளதாகக் குறிப்பிட்ட அவர்,

தற்போ தைய உத்தரவாத விலையைக் கடந்த ஆண்டை விடவும் 15 ரூபாய் அதிகமாக நிர்ணயித் துள்ளதாகவும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-தற்போதைய உத்தரவாத விலை நியாயமானது என பெரும்பாலான விவசாயிகள் ஏற்றுக்கொண்டுள்ளபோதிலும் அரசியல் நோக்கங்களுக்காகச் சிலர் குறித்த விலை போதாது எனக் குறிப்பிடுகின்றனர்.

எதிர்வரும் 15 ஆம் முதல் 20 ஆம் திகதி வரை நெல்லுக்கான விலை ஏற்படுத்தியுள்ள தாக்கத்தை அறிய முடியும்.

விவசாயிகளிடமிருந்து 10 முதல் 15 வீதமான நெல்லை அரசாங்கம் கொள்முதல் செய்கிறது.

எனவே, 230 ரூபாவுக்கு குறைவான விலையில் நாடு அரிசியை வழங்கும் எதிர்பார்ப்பிலேயே நெல்லுக்கான விலை நிர்ணயிக்கப்பட்டது.

நெல் கிடைக்கும் அளவுக்கு ஏற்ப களஞ்சியசாலைகள் திறக்கப்படும்.

இந்த மாத இறுதியில் நாடளாவிய ரீதியிலுள்ள 220 நெல் களஞ்சியசாலைகள் ஊடாக அரசாங்கம் நெல் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்த்துள்ளது-என்றார். (அ)

## கொழும்பு மனிதப் புதைகுழியில் மீட்கப்பட்டவை கொலை செய்யப்பட்டவர்களின் எலும்புக்கூடுகள்!



கொழும்பு, பெப். 10

கொழும்பு துறைமுகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகளில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளில் இரண்டு இளம் குழந்தைகளின் எலும்புக்கூடுகள் உட்பட 16 பேரின் எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தொல்பொருள் ஆய்வாளர் பேராசிரியர் ராஜ் சோமதேவா தெரிவித்தார்.

இந்த மனிதப் புதைகுழி வழக்கமான புதைகுழி அல்ல என்றும், உடல்கள் புதைக்கப்பட்ட விதம் அவை கொலை செய்யப்பட்டவை என்பதைக் காட்டுகிறது என்றும் கூறிய பேராசிரியர், சம்பவம் நடந்த காலத்தை அறிவியல் பரிசோதனைக்குப் பிறகு தீர்மானிக்க முடியும் என்றும், நீதிமன்றத்தின் அறிவுறுத்தல்களின்படி அறிக்கைகள் வழங்கப்படும் என்றும் கூறினார்.

இதுவரை 13 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், கூடுதலாக, கணிசமான எண்ணிக்கையிலான உடைந்த பாகங்கள் கண்டுபிடிக் கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மேலும் மூன்று பேரின் எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தாமிரத்துடன் கலந்த ஒன்று உருகியதால் ஏற்பட்ட கறை ஒரு சிறு குழந்தையின் கையில் இருப்பதாகவும் பேராசிரியர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பு கூடுதல் நீதவான் மஞ்சுள ரத்நாயக்க மற்றும் துறைமுக பொலிஸ் பொறுப்பதிகாரி ஜெயரத்ன ஆகியோரும் கொழும்பு துறைமுக வளாகத்தில் நடைபெற்ற இந்த அகழ்வாராய்ச்சியில் பங்கேற்றனர்.

கொழும்பு துறைமுக வளாகத்தில் உள்ள மனித புதைகுழி அகழ்வாராய்ச்சிக்கு பேராசிரியர் ராஜ் சோமதேவா தலைமை தாங்குகிறார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச பணியாளர்களுக்கான சம்பளம் அதிகரிக்கப்படும்!

## பிரதமர் ஹரிணி அமரசூரிய

கொழும்பு, பெப். 10

**எதிர்காலத்தில் அரச பணியாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.**



பிரதமர் மற்றும் ஆசிரியர் அதிபர் தொழிற்சங்க கூட்டணியினருக்கு இடையே நேற்று முன் தினம் அலரி மாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் குறிப்பிட்டார்.

இதன்போது ஆசிரியர், அதிபர் மற்றும் ஆசிரியர் ஆலோசனை சேவைகளிலும் கல்வித் துறையிலும் காணப்படும் பல பிரச்னைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

குறிப்பாக குறித்த சேவைகளில் காணப்படும் பதவி உயர்வுகள், சம்பள முரண்பாடுகள், தொழில்முறை பிரச்னைகள், ஆசிரியர் அதிபர் சேவையில் (தேசிய மற்றும் மாகாண) முறையான இடமாற்றங்கள், பாடசாலைகளில் மாணவர்களை சேர்த்தல்,நிதி வசூலித்தல், தேசிய பாடசாலைகளில் அதிபர் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு, புதிய கல்வி சீர்திருத்தங்கள் மற்றும் பிரிவேனா அமைப்பில் உள்ள சிக்கல் நிலைகளை தீர்ப்பது உள்ளிட்ட பல பிரச்னைகள் குறித்து கலந்துரையாடப்பட்டன.

அத்துடன் அரை அரச பாடசாலைகளில் கட்டணம் வசூலிப்பது,

வகுப்பு அளவு களை 35 மாணவர்களுக்கு மட்டுப்படுத்துவது, வகுப்பு அளவுகளை மட்டுப்படுத்துவது மற்றும் ஆசிரியர் ஆலோசனை சேவைக்கான வெட்டுப்புள்ளி பரீட்சைகளை நடத்துவது போன்ற விடயங்கள் தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

இதனையடுத்து பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்க்கும்போது, வெற்றிடங்கள் இல்லை எனில் மாணவர்களை சேர்க்காமல் இருத்தல், கல்வி அமைச்சு இதற்காக சிபாரிசு கடிதங்களை வழங்காது இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த பிரதமர்,எதிர்காலத்தில் ஆசிரியர்கள் உட்பட அனைத்து அரசு பணியாளர்களின் சம்பளத்தையும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அஸ்வெசும சிறந்தது என ஏற்றுக் கொள்ள முடியாது

## சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 10



வறுமை நிலை தொடர்பில் எவ்வித புரிதலும் இன்றி அஸ்வெசும திட்டத்தின் வெற்றி குறித்து எவ்வாறு தீர்மானிக்க முடியும்? வறுமையை ஒழிப்பதற்கு முன்னர் காணப்பட்ட திட்டங்களை விட அஸ்வெசும சிறந்ததெனக் கூறுவதை தன்னால் ஏற்றுக் கொள்ள முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

"எதிர்காலத்துக்கான பட்ஜெட்" என்ற தொனிப்பொருளில் கொழும்பில் இடம்பெற்ற மாநாடொன்றில் கலந்துகொண்ட போதே எதிர்க்கட்சி தலைவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-தற்போதுள்ள வறுமை நிலை தொடர்பில் எவ்வித புரிதலும் இன்றி அஸ்வெசும திட்டத்தின் வெற்றி குறித்து எவ்வாறு தீர்மானிக்க முடியும்? வறுமை நிலை தொடர்பில் சரியான தரவுகள் அரசாங்கத்திடமும் இல்லை.

வறுமை நிலை அதிகரித்தமை தொடர்பில் சர்வதேச நிறுவனமொன்று தரவுகளை வெளியிட்டிருந்தது.

அதற்க மைய மூன்றில் ஒரு பகுதி மக்கள் வறுமையிலிருப்பதாகக் கூறப்பட்டது.

அந்த வகையில் முன்னர் காணப்பட்ட வறுமை நிலைமையை ஒழிப்பதற்கான வேலைத்திட்டங்களை விட, அஸ்வெசும வேலைத்திட்டம் சிறந்தது எனக் கூறுவதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது.

காரணம் அது திட்டமிடலற்ற, பெருமளவில் அரசியல் மயமாக்கப்பட்ட, தொழிநுட்ப அடிப்படையிலன்றி, தரவுகள் இன்றி நடைமுறைப்படுத் தப்பட்ட திட்டமாகும்-என்றார். (அ)

# சட்டமா அதிபரை பதவி விலக்க சூழ்ச்சி செய்கின்றது அநுர அரசு

கொழும்பு, பெப். 10

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பில் நாடகமொன்றை அரங்கேற்றி சட்டமா அதிபர் மீது அழுத்தம் பிரயோகித்து அவரை பதவி விலகச் செய்வதே அரசாங்கத்தின் சூழ்ச்சியாகும். சட்டத்துறையில் அரசியல் தலையீடுகளை செலுத்தாமல் விசாரணைகளை சுயாதீனமாக முன்னெடுப்பதற்கு குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு இடமளிக்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர வலியுறுத்தினார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனை வலியுறுத்திய அவர் மேலும் குறிப்பிடுகையில்-

சட்டமா அதிபர் திணைக்களத்தின் மீது ஜனாதிபதிக்கோ அல்லது அமைச்சர்களுக்கோ அழுத்தம் பிரயோகிக்க முடியாது.

அந்த வகையில் எந்தவொரு வழக்கு விசாரணைகளையும் துரிதப்படுத்துமாறும் உத்தரவிடவும் முடியாது. நல்லாட்சி அரசாங்கத்தில் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதன் பின்னர் கோட்டாபயவின் ஆட்சி காலத்தில் அந்த விசாரணைகளை முன்னெடுத்து வந்த ஷானி அபேசேகர, ரவி செனவிரத்ன உள்ளிட்டோர் அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளராக லசந்த கொலை தொடர்பில் நல்லாட்சியின்போது விசாரணைகளை முன்னெடுத்ததைப் போன்று, அந்த நடவடிக்கைகளை தற்போது மீண்டும் ஆரம்பிக்குமாறு ஷானி அபேசேகரவைக் கோருகின்றோம்.

15ஆண்டுகளின் பின்னராவது லசந்தவுக்கான நீதியை நிலைநாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்துகின்றோம்.

எனினும் அவற்றை நிவர்த்தி செய்வதற்கு பல்வேறு வழிமுறைகள் காணப்படுகின்றன. அதனை விடுத்து சட்டமா அதிபர் திணைக்கள செயற்பாடு களை அரசியல் மயமாக்குவது பொறுத்தமற்றது.-என்றார். (அ)

# டிஜிற்றல் அடையாள அட்டை திட்டத்தை செயல்படுத்த இலங்கை அரசு இணக்கம்

## இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா

கொழும்பு, பெப். 10



ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் சமீபத்திய இந்திய விஜயமானது மக்களை மையமாகக் கொண்ட டிஜிற்றல் மயமாக்கலுக்கு மேலும் உத்வேகத்தை அளித்துள்ளது.

அந்த வகையில் இந்திய உதவியுடன் 300 கோடி ரூபா மதிப்பிலான தனித்துவமான டிஜிற்றல் அடையாள அட்டை திட்டத்தை செயல்படுத்துவதை விரைவுபடுத்த இலங்கை தலைவர்கள் ஒப்புக்கொண்டதாக இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற பிம்ஸ்டெக் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில்-பிம்ஸ்டெக் உறுப்பு நாடுகள் வர்த்தகம், முதலீடு, அபிவிருத்தி, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம், பாதுகாப்பு, விவசாயம், உணவுப் பாதுகாப்பு, மக்களிடையே தொடர்பு, அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் இணைப்பு உள்ளிட்ட துறைகளில் கூட்டு ஒத்துழைப்பு நோக்கங்களை ஆராய்ந்து வருகின்றன. கடந்த பத்தாண்டுகளில் இந்தியா வேகமாக டிஜிற்றல் மாற்றத்திற்கு உட்பட்டுள்ளது.

டிஜிற்றல் மயமாக்கலை இணைப்புக்கான வழிமுறையாக மட்டுமல்லாமல் - சமத்துவம் மற்றும் வாய்ப்புக்கான ஊடகமாகவும் இந்தியா ஏற்றுக்கொண்டது. அதுவே எமது டிஜிற்றல் பொது உட்கட்டமைப்பின் சாராம்சமாகும்.

இந்தியா இன்று அதன் 1.3 பில்லியன் மக்களுக்கு டிஜிற்றல் அட்டைகளை வழங்கியுள்ளது. எம்மத்தியில் 1.2 பில்லியன் நவீன கையடக்க தொலைபேசி பயனர்கள், 950 மில்லியன் இணைய பயனர்கள் உள்ளனர்.

உலகின் நிகழ்நேர டிஜிற்றல் பரிவர்த்தனைகளில் 40 சதவீதம் இந்தியாவில் நடைபெறுகிறது. கடந்த பத்தாண்டுகளில், பூமிக்கும் சந்திரனுக்கும் இடையிலான தூரத்தை விட எட்டு மடங்கு அதிகமான ஒப்டிக்கல் பைபர்களை இந்தியா அமைத்துள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் சமீபத்திய இந்திய விஜயமானது இந்த மிக முக்கியமான ஒத்துழைப்புத் தூணான மக்களை மையமாகக் கொண்ட டிஜிற்றல் மயமாக்கலுக்கு மேலும் உத்வேகத்தை அளித்தது.

இந்திய உதவியுடன் 300 கோடி ரூபா மதிப்பிலான தனித்துவமான டிஜிற்றல் அடையாள அட்டை திட்டத்தை செயல்படுத்துவதை விரைவுபடுத்த இலங்கை தலைவர்கள் ஒப்புக்கொண்டனர். டிஜிற்றல் பொருளாதாரம் குறித்த கூட்டுப் பணிக்குழுவும் அமைக்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

# பிரதமரைச் சந்தித்து பேசினார் பிம்ஸ்டெக் பொதுச்செயலாளர்!

கொழும்பு, பெப். 10

பிம்ஸ்டெக் பொதுச்செயலாளரும், தூதுவருமான இந்திரமணி பாண்டே பிரதமர் அலுவலகத்தில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவை சந்தித்துள்ளார்.

பிம்ஸ்டெக்கில் பிராந்திய ஒத்துழைப்புக்கான இலங்கையின் தொடர்ச்சியான பங்களிப்பு குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் இலங்கையில் முன்னணிப் பங்கு வகித்த சுகாதாரச் சேவைகள், மனித வள அபிவிருத்தி மற்றும் டிஜிற்றல் மயமாக்கல் உள்ளிட்ட ஒத்துழைப்பின் முக்கிய துறைகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

பிம்ஸ்டெக் உறுப்பு நாடுகளிடையே பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியை ஏற்படுத்த இந்தத் துறைகளை வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை இந்திரமணி பாண்டே சுட்டிக்காட்டினார்.

இந்த கலந்துரையாடலில் பிம்ஸ்டெக் அமைப்பின் இலங்கைக்கான பணிப்பாளர் கலாநிதி ஏ. சாஜ் யு மெண்டிஸ், பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி,

மேலதிக செயலாளர் சாகரிகா போகஹவத்த மற்றும் வெளிவிவகார அமைச்சின் உதவி பணிப்பாளர் பிரார்த்தனா கௌஷலியா ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (அ)

# நீர் கட்டணத் திருத்தம் இந்த மாத இறுதியில்!

கொழும்பு, பெப். 10

மின்சாரக் கட்டணத் திருத்தத்துக்கு ஏற்ப, நீர் கட்டணத் திருத்தம் இந்த மாத இறுதியில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்தார்.

அத்துடன் நீர்க் கட்டணத்தைக் குறைப்பதற்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவு தனக்குக் கிடைத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இது தொடர்பான முன்மொழிவு, விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரிடம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர்இதேவேளை, இந்த முறை நீர் கட்டணத்தை 10 முதல் 30 சதவீதிற்கு இடையில் குறைக்க முடியும் எனவும் குறிப்பிடத்தக்கது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைந்து விழும் நிலையில் சாய்ந்தமருது தோணா பாலம்

## வெறுமனே அழகு படுத்துவது பெரும் ஆபத்தை ஏற்படுத்தும்

கல்முனை, பெப்.10

**சாய்ந்தமருது தோணா பாலம் உடைந்து விழும் நிலையில் உள்ளதால் வெறுமனே அழகு படுத்துவது பெரும் உயிராபத்தை ஏற்படுத்தும் என்று பிரதேச மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.**

சாய்ந்தமருது கடற்கரை வீதியில் உள்ள மிகப் பழமையான தோணா பாலத்தை சிறு திருத்தங்கள் மாத்திரம் மேற்கொண்டு அழகு படுத்த முயற்சிக்கும் செயல்பாட்டை பொது மக்கள் கண்டித்துள்ளதுடன் குறித்த பாலத்தின் கீழ் பகுதியில் உள்ள அபாயகரமான நிலைமையையும் தெளிவு படுத்தினர்.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பிரதேசத்தில் அமைந்துள்ள இப்பாலத்தின் ஊடாக சாய்ந்தமருது பழைய மருத்துவமனை, உப தபாலகம், றியாலுல் ஜன்னா வித்தியாலயம், அஷ்ரப் ஞாபகார்த்த பூங்கா பள்ளிவாசல், மீனவர்களின் கட்டடத்தொகுதி என பல்வேறு அரச, தனியார் காரியாலயங்கள், வர்த்தக நிலையங்கள் காணப்படுகின்றன.

மேலும், இப்பாலத்தின் ஊடாக தினந்தோறும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன், அதிகளவான கனரக வாகனங்கள் பயணிப்பதால் தற்போது இந்தப் பாலம் பலத்த சேதத்துக்குள்ளாகியுள்ளது. மேலும், கடந்த 2004ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட சுனாமி பேரழிவிலும் குறித்த பாலம் பாதிப்படைந்ததுடன் தற்போது உடைந்து விழும் நிலையில் உள்ளது.

இந்த நிலையில் பாலத்தின் பாதுகாப்புக்காக உள்ள மேல் தூண்களை மாத்திரமே அகற்றி அழகு படுத்துவதால் எதிர்காலத்தில் பெரும் ஆபத்துகள் இடம்பெறும் என சம்பந்தப்பட்டவர்கள் கருத்தில் கொள்ள வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அபாயகரமான நிலையில் உள்ள இந்தப் பாலம் புனர்நிர்மாணம் செய்யும் நிலையில் தற்போது இல்லை என்பதுடன், வெறுமனே அழகு படுத்த எடுக்கப்பட்ட முடிவை மறுபரிசீலனை செய்து, இந்தப் பாலத்தை முற்றாக அகற்றி புதிய பாலம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் சிவில், சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ-01)

# தைலாப்பொட்டி நூல் வெளியீடு



சாய்ந்தமருது, பெப்.10

2024 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழாவில் தெரிவு செய்யப்பட்ட கலாபூஷணம் ஏ. பீர் முகம்மது எழுதிய தைலாப்பொட்டி நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் நடைபெற்றது.

சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையப் பொறுப்பதிகாரி யூ. கே. எம். றிம்ஸான் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம். எம். ஆசிக் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (எ)

# ஐஸ் போதைப்பொருளுடன் கைதானவரிடம் விசாரணை

கல்முனை, பெப்.10

ஐஸ் போதைப் பொருளுடன் பாடசாலைக்கு அருகில் கைதான 34 வயது சந்தேக நபரிடம் களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப் படையினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்த நபர் தொடர்பில் களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் கடந்த 7 ஆம் திகதி இரவு அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரபல பாடசாலைக்கு அருகில் கைது செய்யப்பட்டிருந்தார்.

சந்தேக நபரிடம் இருந்து ஒரு கிராம் 60 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டது.

அத்துடன், சந்தேக நபர் உட்பட சான்றுப்பொருட்கள் சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்டு வருகின்றனர். (எ-01)

# கல்முனை வலய அதிபர்கள் சங்க முப்பெரும் கௌரவிப்பு நிகழ்வு



கல்முனை, பெப்.10

கல்முனை கல்வி வலயம் இறுதியாக வெளியான சாதாரண தர பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் தேசிய ரீதியாக இரண்டாம் இடத்தை பெற்றதை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும், கல்முனை வலயக்கல்விப் பணிமனை கணக்காளராக இருந்து சமுர்த்தி திணைக்கள பிரதம கணக்காளராக பதவி உயர்வு பெற்று செல்லும் வை. ஹபீபுல்லாஹ்ஹின் சேவை நலன் பாராட்டு நிகழ்வும், கல்முனை வலயக்கல்வி பணிமனைக்கு புதிய கணக்காளராக நியமனம் பெற்று வருகை தந்திருக்கும் கே. லிங்கேஸ்வரனை வரவேற்கும் நிகழ்வும் கல்முனை கல்வி வலய அதிபர்கள் சங்க ஏற்பாட்டில் சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை மண்டபத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. (எ)

# போலி நிறுத்தல் உபகரணங்கள் கைப்பற்றல்



மட்டக்களப்பு, பெப்.10

மட்டக்களப்பு மாவட்ட அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தால் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனையின் போது சட்டவிரோத நிறுவை அளவை உபகரணங்கள் பெருமளவில் கைப்பற்றப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் பணிப்புரைக்கு அமைவாக வவுணதீவு, பட்டிப்பளை, போரதீவு பற்று வெல்லாவெளி பிரதேச செயலாளர் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது அனுமதிக்கப்படாத 10 நிறுவை அளவை உபகரணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்கள மாவட்ட ஆய்வுகூட நிலைய பொறுப்பதிகாரி வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வவுணதீவு, பட்டிப்பளை, போரதீவு பற்று வெல்லாவெளி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் நெல் அறுவடை மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் 110 இடங்களில் மேற்கொள்ள ப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது அனுமதிக்கப்படாத 10 நிறுவை அளவை உபகரணங்களும் 4 முத்திரையிடாத நிறுவை அளவை உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. (எ)

# மாணவர்கள் கௌரவிப்பு



கல்முனை, பெப்.10

2024 ஆம் ஆண்டு தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கடமையாற்றும் கல்விசாரா மற்றும் நிருவாக உத்தியோகத்தர்களின் பிள்ளைகளைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு தென் கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் தலைவர் முனாஸ் மொஹீதின் தலைமையில் நூலக கேட்போர் கூடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக துணைவேந்தர் யு. எல். அப்துல் மஜீட்டும் கௌரவ விருந்தினராக பதிவாளர் எம். ஐ . நௌபர் , பல்கலைக்கழக பதில் நூலகர் எம் . சி. எம் . அஷ்வரும் கலந்து சிறப்பித்தனர்.இந்த நிகழ்வில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திய டைந்த 30 மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

# காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரிப்பு

திருகோணமலை, பெப்.10

கிண்ணியாவில் மக்களின் குடியிருப்புகளுக்குள் நுழையும் காட்டு யானைகளால் பெரும் சொத்தழிவுகள் ஏற்படுவதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு கிராமத்துக்குள் புகுந்த காட்டு யானைகள் பல தென்னை மரங்களையும், வாழை முதலான பயிர்களையும் துவம்சம் செய்ததோடு, ஓர் ஏக்கருக்கு மேற்பட்ட வேளாண்மைகளையும் சேதப்படுத்தியுள்ளன.

இந்தச் சம்பவம் திருகோணமலை மாவட்டம் கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட வெல்லாங்குளம், மஜீத் நகர் முதலான பகுதிகளில் இடம்பெற்றுள்ளது.

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் யானை - மனிதன் மோதல்களை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்த போதிலும் அவற்றையும் மீறி சில அசம்பாவிதங்கள் இடம்பெறுகின்றன.

அந்தவகையில், கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வெல்லாங்குளம் பகுதிக்குள் இரவு நுழைந்த காட்டு யானைகள் தென்னை, கத்தரி முதலான பயிர்களையும் வேளாண்மைகளையும் நாசமாக்கியுள்ளதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அதேவேளை, வீடொன்றையும் காட்டு யானைகள் துவம்சம் செய்துள்ளன.

இதனால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக மக்கள் கூறினர்.

ஓர் ஏக்கர் வயல் நிலங்களை யானைகள் நாசமாக்கி விட்டன. இந்தப் பகுதிகளில் யானைகளின் தொல்லை அதிகமாக உள்ளது. எங்களுடைய வாழ்வாதாரத்தை யானைகள் அழித்து விடுகின்றன.

ஒவ்வொரு இரவும் வந்து இவ்வாறான நாசத்தை செய்கின்றன. இரவு நேரங்களில் எங்களுக்கு ஏதேனும் அசம்பாவிதம் நடந்தால் வெளியில் செல்ல முடியாது. இதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயி ஒருவர் தெரிவித்தார்.


இரவு நேரங்களில் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. சின்னக் குழந்தைகளை வைத்துக் கொண்டிருக்கின்றோம். அவர்களுக்கு மட்டுமல்ல எங்களுக்கும் பாதுகாப்பு வேண்டும்.

நாங்கள் பெரும் துன்பத்துக்கு மத்தியில் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, உரிய அதிகாரிகள் இது தொடர்பில் கவனம் செலுத்தி எமக்கான உரிய தீர்வை பெற்றுத் தர வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரீபியன் கடலில் நிலநடுக்கம் சுனாமி எச்சரிக்கையால் பதற்றம்



வாஷிங்டன், பெப்.10

**கரீபியன் கடலில் நேற்றுமுன்தினம் 7. 6 ரிக்டர் அளவிலான சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இதையடுத்து பல நாடுகளுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**

ஹொண்டூரஸின் வடக்கே, கேமன் தீவுகளின் கடற்கரையிலிருந்து சுமார் 209 கிலோ மீற்றர் தொலைவிலும், 10 கிலோ மீற்றர் ஆழத்திலும் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலநடுக்கத்துக்குப் பிறகு கரீபியன் கடல் மற்றும் ஹொண்டூராசின் வடக்கே சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க சுனாமி எச்சரிக்கை அமைப்பு தெரிவித்துள்ளது.

ஆனால், அமெரிக்க அத்திலாந்திக் அல்லது வளைகுடா கடற்கரைகளில் சுனாமி எதிர்பார்க்கப்படவில்லை என்றும், புவேர்ட்டோ ரிக்கோ மற்றும் விர்ஜின் தீவுகளுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே நிலநடுக்கத்தால் உருவான அபாயகரமான அலைகள் கேமன் தீவுகள், ஜமைக்கா, கியூபா, மெக்சிக்கோ, ஹொண்டுராஸ், பகா மாஸ், பெலிஸ், ஹைட்டி, கோஸ்டாரிக்கா, பனாமா, நிகரகுவா மற்றும் குவாத்தமாலா ஆகிய நாடுகளின் கடற்கரைகளில் மையப்பகுதியிலிருந்து 620 மைல்களுக்குள் ஏற்பட வாய்ப்புள்ளதாக பசுபிக் சுனாமி எச்சரிக்கை மையம் அறிவித்துள்ளதால் அங்கு பதற்றம் நிலவுகிறது. (எ)

# விமான விபத்தில் சிக்கி 10 பேர் உயிரிழந்தனர்!

## அமெரிக்காவில் தொடரும் சோகம்



ஜூனோவ், பெப்.10

அமெரிக்காவில் விமான விபத்தில் சிக்கி 10 பேர் உயிரிழந்தனர்.

அலாஸ்கா மாகாணம் உனலக்லீட் விமான நிலையத்தில் இருந்து நோம் நகருக்கு செஸ்னா 208 பி என்ற ரக விமானம் கடந்த வியாழக்கிழமை புறப்பட்டது. அமெரிக்காவின் பெரிங் ஏர்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான அந்த விமானத்தில் விமானி உட்பட 10 பேர் பயணித்தனர்.

நார்டன் சவுண்ட் அருகே உள்ள மலைப்பகுதியில் சென்ற போது அங்கு கடும் பனிப்பொழிவு நிலவியது. எனவே, விமானத்தை இயக்குவதில் விமானிக்கு சிக்கல் ஏற்பட்டதாகத் தெரியவந்துள்ளது. இதையடுத்து விமானி, உடனடியாக கட்டுப்பாட்டு அறையை தொடர்பு கொள்ள முயன்றார். ஆனால், அதற்குள் கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை விமானம் இழந்தது. இதனால், விமானம் மாயமானதாக அறிவிக்கப்பட்டது.

இதன் பின்னர் கடைசியாக விமானத்தின் சிக்னல் கிடைத்த இடத்துக்கு அமெரிக்க மீட்புப் படையினர் மற்றும் கடற்படையினரும் விரைந்தனர். விமானத்தை தேடும் பணி முடுக்கி விடப்பட்டது. இந்த நிலையில் நேற்று முன்தினம் அலாஸ்கா பகுதியில் பனிக்கட்டிகள் சூழ்ந்த இடத்தில் விமானம் கீழே விழுந்து நொறுங்கி கிடந்ததை மீட்புக் குழுவினர் கண்டறிந்தனர்.

இந்த விபத்தில் விமானத்தில் பயணித்த 10 பேரும் உயிரிழந்து விட்டனர் என்று மீட்புப் படையினர் தெரிவித்தனர். கடந்த 10 நாட்களில் அமெரிக்காவில் அடுத்தடுத்து 2 விமான விபத்து சம்பவங்கள் நடந்து 69 பேர் உயிரிழந்தனர். (எ)

# சீனாவில் நிலச்சரிவு 30 பேரின் நிலை என்ன?



பீஜிங், பெப்.10

சீனாவின் தென்மேற்கில் உள்ள சிச்சுவான் மாகாணத்தில் நேற்று முன்தினம் திடீரென ஏற்பட்ட நிலச்சரிவால் 10இற்கும் மேற்பட்ட வீடுகள் மண்ணுக்குள் புதைந்தன.

இந்த நிலச்சரிவில் சிக்கி 30இற்கும் மேற்பட்டோர் மாயமாகினர்.

இதனைத் தொடர்ந்து, அந்த நாட்டின் அவசரகால மேலாண்மை அமைச்சகத்தின் சார்பில் நூற்றுக்கணக்கான மீட்புப் படையினர் அப்பகுதியில் குவிக்கப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். இந்தச் சூழலில் மண்ணுக்குள் புதைந்த 2 பேர் உயிருடன் மீட்கப்பட்ட நிலையில், நிலச்சரிவால் மாயமாகிய 30இற்கும் மேற்பட்டோரைத் தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. (எ)

## சிலியில் காட்டுத்தீயால் அவசர நிலை பிரகடனம்

சாண்டியாகோ, பெப்.10

தென் அமெரிக்காவில் உள்ள சிலி நாட்டின் நுபல், மவுலி மாகாணங்களில் கடந்த சில நாட்களாக காட்டுத்தீ வேகமாக பரவி வருகிறது.

காட்டுத்தீயைக் கட்டுப்படுத்த தீயணைப்புப் படையினர் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இரு மாகாணங்களிலும் 15 இடங்களில் காட்டுத்தீ பரவி வருகிறது.

இந்த நிலையில், காட்டுத்தீ காரணமாக நுபல், மவுலி ஆகிய 2 மாகாணங்களிலும் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, காட்டுத்தீயை ஏற்படுத்தியதாக இதுவரை 60 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (எ)

# கொக்கெய்ன் கொடிய போதைப்பொருளல்ல

## கொலம்பிய ஜனாதிபதி சொல்கிறார்

பகோடா, பெப்.10

கொக்கெய்ன் கொடிய போதைப்பொருள் அல்ல என்று கொலம்பிய ஜனாதிபதி கஸ்டவோ பெட்ரோ தெரிவித்தார்.

மிகக் கொடிய போதைப் பொருட்களில் ஒன்றாக கொக்கெய்ன் உள்ளது. மெக்சிக்கோ, தென் அமெரிக்க நாடுகளில் இருந்து கொக்கெய்ன் கடத்தப்பட்டு உலகம் முழுவதும் விற்பனை செய்யப்படுகிறது. போதைப்பொருள் கலாசாரத்தை ஒழிக்க அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் போராடி வருகின்றன. இந்த நிலையில் தென் அமெரிக்க நாடான கொலம்பியாவில் அமைச்சரவைக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "மதுபானங்களுடன் ஒப்பிடும்போது கொக்கெய்ன் ஒன்றும் மிகக் கொடிய போதைப்பொருள் அல்ல என்பது அறிவியல் உண்மை. கொக்கெய்னுக்கு உலகளவில் சட்டபூர்வ அங்கீகாரம் வழங்கினால் அதன் பயன்பாடு எளிதாகக் குறையும்"- என்றார். (எ)

# அமெரிக்காவின் ஒரு பகுதியாக கனடாவை இணைக்க முயற்சி!

## ட்ரம்பின் நோக்கம் ஆபத்தானது

ஒட்டாவா,பெப்.10

"கனடாவை அபகரித்து அமெரிக்காவின் ஒரு பகுதியாக இணைத்துக் கொள்வதில் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் காட்டும் ஆர்வம் ஆபத்தானது" என்று கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கனடா பிரதமர் பதவியில் இருந்து விரைவில் வெளியேற இருக்கும் ஜஸ்டின் ட்ரூடோ, அந்த நாட்டை அமெரிக்காவின் 51ஆவது மாநிலமாக இணைப்பதற்கு ட்ரம்ப் காட்டும் ஆர்வத்தை சுட்டிக்காட்டி



தனது ஆதரவாளர்களிடம் நேற்று முன்தினம் பேசினார். அப்போது அவர், "ட்ரம்ப் நிர்வாகம் நம்மிடம் எத்தனை முக்கியத்துவமான கனிம வளங்கள் உள்ளன என்பதை தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

அதனால் தான் அடிக்கடி நம்மை அமெ ரிக்காவுடன் இணைத்து அதன் 51ஆவது மாநிலமாக மாற்று வது பற்றி பேசி வருகிறார்கள் என்று நான் உங்களுக்கு கூறிக் கொள்கிறேன்.

அவர்கள் நமது வளங்களைப் பற்றியும், நம்மிடம் என்னவெல்லாம் இருக்கிறது என்பது பற்றியும் நன்கு அறிந்து வைத்திருப்பதுடன் அவற்றின் பயன்களை அடையவும் விரும்புகிறார்கள். அதனைச் செய்வதற்கான ஒரே வழி கனடாவை அமெரிக்காவுக்குள் ஐக்கியம் ஆக்குவது தான் என்று ட்ரம்ப் புரிந்து வைத்துள்ளார்"- என்றார். (எ)

# சட்டவிரோத குடியேறிகள் 8,000 பேர் இதுவரை கைது

வாஷிங்டன், பெப்.10

அமெரிக்காவின் ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்ற பின்பு 8 ஆயிரம் சட்டவிரோத குடியேறிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவின் எல்லை வழியே, அண்டை நாடுகளான மெக்சிக்கோ, கனடா உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் சட்டவிரோதமான வகையில் புலம்பெயர்ந்து அந்த நாட்டுக்குள் செல்கின்றனர்.

இந்த நிலையில், இதுபோன்ற சட்டவிரோத குடியேறிகளுக்கு எதிராக, ட்ரம்ப் தலைமையிலான புதிய அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இதன்படி, அவர்களை நாடு கடத்தும் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. இந்தச் சூழலில், இந்தியாவை சேர்ந்த சட்டவிரோத குடியேறிகள் 104 பேர், அமெரிக்க இராணுவ விமானத்தின் உதவியுடன் அண்மையில் இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்டனர்.

இந்த நடவடிக்கையின் தொடர்ச்சியாக, இதுவரை 8 ஆயிரம் சட்டவிரோத குடியேறிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2ஆவது போட்டியிலும் ஆஸி. வெற்றி டெஸ்ட் தொடரை இழந்தது இலங்கை




காலி, பெப்.10

இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் அவுஸ்திரேலிய அணி அபார வெற்றி பெற்றது. இதனால், சொந்த மண்ணில் தொடரை முழுமையாக இழந்தது இலங்கை அணி.

இரு அணிகள் இடையிலான 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி காலி மைதானத்தில் நடைபெற்றது. இதில், இலங்கை தனது முதல் இன்னிங்ஸில் 257 ஓட்டங்களில் சகல விக்கெட்களையும் இழந்தது. இலங்கை தரப்பில் அதிகபட்சமாக குசல் மெண்டிஸ் 85 ஓட்டங்கள் எடுத்தார். அவுஸ்திரேலியா தரப்பில் மிட்செல் ஸ்டார்க், குனமென், நாதன் லயன் ஆகியோர் தலா 3 விக்கெட்கள் வீழ்த்தினர். இதனையடுத்து முதல் இன்னிங்ஸை தொடங்கிய அவுஸ்திரேலிய அணியில் ஸ்டீவ் சுமித் மற்றும் அலெக்ஸ் ஹெறி சதமடித்து அசத்தினர். இதில் ஸ்மித் 131 ஓட்டங்களும், அலெக்ஸ் ஹெறி 156 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். இதனால் அவுஸ்திரேலிய அணி 414 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. இதன் காரணமாக அந்த அணி 157 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது. இலங்கை அணி சார்பில் பிரபாத் ஜெயசூர்யா 5 விக்கெட்கள் வீழ்த்தினார்.

2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய இலங்கை அணியில் பதும் நிஸ்ஸங்க 8, திமுத் கருணாரத்ன 14, தினேஷ் சந்திமால் 12, கமிந்து மெண்டிஸ் 14 , தனஞ்செய டி சில்வா 23 ஓட்டங்கள் எடுத்து அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

இதையடுத்து அஞ்சலோ மத்தியூஸ் மற்றும் குசல் மெண்டிஸ் ஜோடி சேர்ந்தனர். இருவரும் நிதானமாக விளையாடினர். இதில் மத்தியூஸ் அரைச்சதம் அடித்து, 76 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இறுதி யில் 3ஆம் நாள் முடிவில் இலங்கை தனது 2ஆவது இன்னிங்ஸில் 62.1 ஓவரில் 8 விக்கெட்களை இழந்து 211 ஓட்டங்கள் எடுத்தது.

நேற்று 4ஆம் நாள் ஆட்டம் நடைபெற்றது. குசல் மெண்டிஸ் அரைச்சதம் அடித்து ஆட்டமிழந்தார். இதனால், இலங்கை அணி 231 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. அவுஸ்திரேலியா சார்பில் லியோன் 4 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இதனால் அந்த அணிக்கு 75 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. தொடர்ந்து விளையாடிய அவுஸ்திரலிய அணி ஒரு விக் கெட் இழப்புக்கு 75 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

இதனால் டெஸ்ட் தொடரை 2 - 0 என அவுஸ்திரேலியா கைப்பற்றியது. (எ)

## 78 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அபார வெற்றி


லாகூர், பெப்.10

பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் போட்டியில் 78 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணி வெற்றி பெற்றது.


பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, நியூசிலாந்து ஆகிய 3 நாடுகள் பங்கேற்றுள்ள ஒருநாள் கிரிக்கெட் தொடர் பாகிஸ்தானில் நடைபெற்று வருகிறது. இந்த தொடர் போட்டி நேற்று முன்தினம் தொடங்கி 14ஆம் திகதி வரை நடைபெறுகிறது. இதில் ஒவ்வொரு அணியும், மற்ற அணியுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் முதல் 2 இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்கு முன்னேறும். முத்தரப்பு ஒருநாள் தொடரில், லாகூரில் உள்ள கடாபி மைதானத்தில் முதலாவது லீக் ஆட்டத்தில் பாகிஸ்தான் - நியூசிலாந்து அணிகள் மோதின .

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து 6 விக்கெட்கள் இழப்புக்கு 330 ஓட்டங்கள் குவித்தது. கிளென் பிலிப்ஸ் 106 ஓட்டங்கள் சேர்த்தார். பாகிஸ்தான் தரப்பில் ஷஹீன் அப்ரிடி 3 விக்கெட்கள் வீழ்த்தினார். இதனையடுத்து 331 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி பாகிஸ்தான் களமிறங்கியது.

ஆனால், பாகிஸ்தான் அணி 47. 5 ஓவர்களில் 252 ஓட்டங்கள் மட்டும் எடுத்து சகல விக்கெட்களையும் இழந்தது. இதனால் நியூசிலாந்து அணி 78 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அதிகபட்சமாக பஹர் ஜமான் 84 ஓட்டங்கள் எடுத்தார். நியூசிலாந்து தரப்பில் மேட் ஹென்றி, மிட்செல் சான்ட்னெர் தலா 3 விக்கெட்கள், மைக்கேல் பிரேஸ்வெல் 2 விக்கெட்கள் வீழ்த்தினர்.



## குத்துச்சண்டை வீரர் மரணம்



பெல்பாஸ்ட், பெப்.10

போட்டியின் போது தலையில் படுகாயமடைந்த இளம் குத்துச்சண்டை வீரர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

அயர்லாந்து குத்துச்சண்டை வீரரான ஜோன் கூனி (வயது - 28), கடந்த முதலாம் திகதி நடைபெற்ற போட்டியின் 9ஆவது சுற்றில் சக போட்டியாளர் தாக்கியதில் தலையில் பலத்த காயமடைந்தார்.

அதனால் அவரால் போட்டியை மேற்கொண்டு தொடர முடியவில்லை.

இதனையடுத்து போட்டி 9ஆவது சுற்றோடு நிறுத்தப்பட்டு ஜோன் கூனி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு பரிசோதனை செய்ததில் அவருக்கு தலையில் இரத்தக்கசிவு ஏற்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது.

அதனைச் சரி செய்ய சத்திர சிகிச்சை செய்யப்பட்டது.

இருப்பினும் ஒரு வார காலம் தீவிர சிகிச்சையில் இருந்த அவர், நேற்று முன்தினம் மரணமடைந்தார். அவரது மரணம் குத்துச்சண்டை உலகில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (எ)

## கில்கிறிஸ்ட் சாதனையை முறியடித்த அலெக்ஸ்

காலி, பெப்.10

இலங்கை - அவுஸ்திரேலியா இடையிலான 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி காலி மைதானத்தில் நடைபெற்றது. இதில் அவுஸ்திரேலிய அணியில் ஸ்டீவ் சுமித் மற்றும் அலெக்ஸ் ஹெறி சதமடித்து அசத்தினர்.

இந்த ஆட்டத்தில் அலெக்ஸ் ஹெறி 156 ஓட்டங்கள் எடுத்ததன் மூலம் அடம் கில்கிறிஸ்டின் மாபெரும் சாதனை ஒன்றை முறியடித்துள்ளார். அதாவது, ஆசியாவில் டெஸ்ட் போட்டி ஒன்றில் அதிக ஓட்டங்கள் எடுத்த அவுஸ்திரேலிய விக்கெட் காப்பாளர் என்ற அடம் கில்கிறிஸ்டின் சாதனையை அலெக்ஸ் ஹெறி முறியடித்துள்ளார்.

இதற்கு முன்னதாக ஆசியாவில் அடம் கில்கிறிஸ்ட் 144 ஓட்டங்கள் எடுத்ததே சாதனையாக இருந்தது. இந்த சாதனையை தற்போது அலெக்ஸ் ஹெறி 156 ஓட்டங்கள் அடித்து முறியடித்துள்ளார். (எ)

## இந்தியாவை வீழ்த்துவதே எமது உண்மையான பணி

### பாகிஸ்தான் பிரதமர் தெரிவிப்பு

லாகூர், பெப்.10

சம்பியன்ஸ் கிண்ண தொடரில் இந்தியாவை வீழ்த்துவதே எமது உண்மையான பணி என்று பாகிஸ்தான் பிரதமர் ஷபாஸ் ஷெரிப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், “எங்கள் அணி சிறப்பாக உள்ளது. எங்கள் அணி சமீபத்தில் நடந்த போட்டிகளில் சிறப்பாக செயல்பட்டுள்ளது. ஆனால், சம்பியன்ஸ் கிண்ணத்தை வெல்வது மட்டுமல்ல இந்தியாவை வீழ்த்துவதே எங்கள் உண்மையான பணி”- என்றார். (எ)




யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் கொழும்பு இந்துக் கல்லூரிக்கும் இடையில் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை முடிவுக்கு வந்த 14ஆவது இந்துக்களின் சமரில் யாழ். இந்துக் கல்லூரி 64 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிரேஷ்ட தமிழ்...

பத்திரிகையின் வாரமலர் மற்றும் இணையத்தளத்தின் முன்னாள் ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளார்.

கடந்த சில வாரங்களாக நோய் வாய்ப்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர் நேற்று தனது வீட்டில் காலமானார். உயிரிழக்கும்போது இராஜநாயகம் பாரதி வீரகேசரி நாளிதழின் யாழ். பிராந்திய ஆசிரியராகக் கடமையாற்றினார்.

தமிழ் ஊடகத்துறையில் தனக்கென ஓர் இடத்தை பிடித்துள்ள இராஜநாயகம் பாரதி போர் இடம்பெற்ற நெருக்கடியான காலத்தில் தனது சிறப்பான ஊடகப் பணியை ஆற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தினக்குரல் முன்னாள் உதவியாசிரியரான தேவகியின் துணைவரான பாரதி ஒரு பிள்ளையின் தந்தையுமாவார்.

யாழ்ப்பாணம் திருநெல்வேலியை பிறப்பிடமாகக் கொண்ட பாரதி 1980களில் ஈழமுரசு பத்திரிகையின் ஆசிரிய பீடத்தில் பணியாற்றியதுடன் அதன் பின்னர் முரசொலி பத்திரிகை ஆசிரிய பீடத்திலும் பணியாற்றிய நிலையில் கொழும்பை வதிவிடமாக்கிக் கொண்டதுடன் வீரகேசரி பத்திரிக்கையின் ஆசிரிய பீடத்தில் உதவியாசிரியராகப் பணியாற்றினார். இந்நிலையில் 1997ஆம் ஆண்டு தினக்குரல் பத்திரிகை தோற்றம் பெறவே அதில் தன்னை இணைத்துக் கொண்ட பாரதி ஞாயிறு தினக்குரல் பத்திரிகையின் பிரதம ஆசிரியராக 2021 ஆம் ஆண்டு வரை பணிபுரிந்ததுடன் தினக்குரல் ஒன்லைன் ஆசிரியராகவும் இருந்தார்.

இந்நிலையில் மீண்டும் தனது மண்ணுக்குத் திரும்பிய பாரதி ஈழநாடு பத்திரிகையின் ஆசிரியராக பணியாற்றியதுடன் தற்போது வீரகேசரியின் வடபிராந்திய பதிப்பின் ஆசிரியராகப் பணிபுரிந்தவேளையிலேயே காலமானார்.

ஞாயிறு தினக்குரல் பத்திரிகையில் ஆர். பாரதி, அபிமன்யு , பார்த்திபன் ஆகிய பெயர்களில் பல்வேறு கட்டுரைகளை எழுதிவந்ததுடன் சர்வதேச ஊடகங்களுக்கும் அரசியல் கருத்துகளையும் செவ்விகளையும் வழங்கி வந்தவர் ஆவர். பல மாவட்டங்களிலும் நடத்தப்பட்ட ஊடகபயிற்சிப்பட்டறைகளிலும் வளவாளராக பயிற்சிகளை வழங்கியுள்ளார்.

பாரதியின் பூதவுடல் தற்போது யாழ் திருநெல்வேலியில் உள்ள விவரம் பின்னர் அறிவிக்கப்படும். (அ)

## நாடு முழுவதும்...

தடை ஏற்பட்டுள்ளது என்று கூறப்பட்டது.

எனினும், மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு பின்னர் நிலைமையை "பாணந்துறை துணை மின்நிலையத்தில் ஏற்பட்ட அவசர நிலை" என்று விவரித்தது. ஆயினும் அமைச்சரின் கூற்றை அமைச்சு உறுதிப்படுத்தவில்லை.

"மறுசீரமைப்பு முயற்சிகள் விரைந்து நடந்து வருகின்றன. அதிகாரிகள் குழுக்கள் கூடிய விரைவில் மின்சாரத்தை மீண்டும் வழமைக்குக் கொண்டுவர வேலை செய்கின்றன." - என்று பிற்பகலில் மின்சக்தி அமைச்சுத் தெரிவித்தது.

மின் விநியோகத்தை வழமைக்குக் கொண்டுவரும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக மின்சக்தி அமைச்சு தெரிவித்தபடி மாலை 4 மணிக்குப் பின்னர்

நாட்டின் ஒவ்வொரு பிரதேசமாக மின் இணைப்பு மீளக் கிட்டியது.

மின்சார விநியோகத்தை மீட்டெடுக்கும் பணியில் ஊழியர்கள் முழு அளவில்

செயற்பட்டு வருகின்றனர் எனவும், திடீரென ஏற்பட்ட மின்வெட்டுக்கு வருத்தம் தெரிவிப்பதாகவும் மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

மின்வெட்டு தொடர்பாக இலங்கை மின்சார சபை இன்னும் உத்தியோகபூர்வ விளக்கத்தை வெளியிடவில்லை.

(அ)

## மின் தடைக்கான...

செயலாளர் பேராசிரியர் உதயங்க ஹேமபால தெரிவித்தார்.

இதேபோன்ற நிலைமை மீண்டும் ஏற்படாமல் தடுக்க தேவையான நடவடிக்கைகளை பரிந்துரைக்க தொடர்புடைய விசாரணை நடத்தப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, நாடு முழுவதும் பல்வேறு காலகட்டங்களில் இவ்வாறு மின் விநியோகத் தடை ஏற்பட்டுள்ளது. இறுதியாக 2023 டிசெம்பர் 9ஆம் திகதி மின்வெட்டு ஏற்பட்டது.

இதேபோன்று, 2016 மார்ச், 2020 ஓகஸ்ட் மற்றும் 2021 டிசெம்பர் மாதமும் நாடு முழுவதும் மின்தடை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## தமிழ் மக்களின்...

நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்த கருத்து தொடர்பில் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தும்பேதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கம் அரசியலமைப்பு விடயத்தை பொருளாதார விடயங்களை கையாண்டதன் பின்னர் கையாள்வதற்கு முனைகின்றது என்று கருதுகின்றேன்.

எனினும் அரசியலமைப்பு சம்பந்தமான விடயம் முக்கியமானது, வடக்கு, கிழக்கில் உள்ள மக்களின் பிரதான எதிர்பார்ப்பு தேசிய பிரச்னைக்கு தீர்வு காண்பதாகும். ஆகவே, பொருளாதார விடயங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் அரசாங்கம் சமகாலத்தில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தி அவற்றை வினைத்திறனாக செயற்படுத்துவதன் ஊடாக வடக்கு, கிழக்கு மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்க முடியும்- என்றார். (அ)

## உள்ளூராட்சி...

வேட்புமனுக்களை கோரவுள்ளதால் ஆரம்பத்தில் இருந்து தேர்தலுக்கான பணிகளை முன்னெடுக்க வேண்டும்.

தேர்தல் பணிகளுக்கு தேவையான நிதி திறைசேரியால் ஒதுக்கப்பட்டுள்ளது ஆகவே, நிதி நெருக்கடி ஏதும் ஏற்படாது. உள்ளூராட்சி அதிகார சபைகள் விசேட ஏற்பாடுகள் சட்டமூலம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு தற்போது அவை விசாரணைகளுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டே உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்கெடுப்பு திகதியை நிர்ணயிக்க முடியும்.

வேட்புமனுக்களை தாக்கல் செய்வதற்கும், தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்வதற்கும் போதுமான கால அவகாசம் வழங்கப்பட வேண்டும். ஆகவே, உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் விசேட ஏற்பாடுகள் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டவுடன் உறுதியான தீர்மானத்தை எடுக்க முடியும்.

மாகாண சபைத் தேர்தல் சட்டத்தில் காணப்படும் சிக்கல்களுக்கு தீர்வு காண வேண்டிய பொறுப்பு பாராளுமன்றத்துக்கு உண்டு என்பதை தொடர்ச்சியாக வலியுறுத்தியுள்ளோம்.

தேர்தல் முறைமை தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக்குழுக்களில் கலப்புத் தேர்தல் முறைமை குறித்து பல பரிந்துரைகளை முன்வைத்துள்ளோம்.

காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தலை வெகுவிரைவில் நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளோம்.

எதிர்வரும் காலங்களில் அரசியல் கட்சிகளுடன் மாகாண சபைத் தேர்தல்கள் குறித்து பேச்சில் ஈடுபடவுள்ளோம்.

மாகாண சபைத் தேர்தல்கள் குறித்து சகல அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். காணப்படும் சட்ட சிக்கலுக்கு தீர்வு கண்டு மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்தும் சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கும் பாராளுமன்றத்துக்கும் உண்டு - என்றார். (அ)

## தமிழரசு...

திகதி வழக்கு முன் விசாரணையின்போது இந்த முன்மொழிவுகள் தொடர்பில் இணக்கப்பாட்டுக்கு வரமுடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு ஜனவரி 21 மற்றும் 27ஆம் திகதிகளில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிர்வாகிகள் தெரிவு தொடர்பில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கை இணக்கப்பாட்டுக்குக் கொண்டுவரும் பொருட்டே குறித்த முன்மொழி வரைவு நீதிமன்றத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சிறிதரன் தெரிவித்துள்ளார். (அ)

## கிளிநொச்சி...

பார்வையிட்டு கலந்துரையாடினார்.

கிளீன் சிறீ லங்கா திட்டத்தை முன்னெடுக்கும் வகையில் குறித்த ரயில் நிலையத்தை பார்வையிட்ட அமைச்சர், பயணிகளுடனும் கலந்துரையாடினார்.

பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் நாடு முழுவதும் காணப்படுகின்றன. அது போல கடமைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஊதியம் போதாது. அவர்களின் சம்பளமும் அதிகரிக்கப்படவேண்டும். அந்த பிரச்னைக்கு மக்களுடனும் கலந்துரையாடி தீர்வு எட்டப்படவேண்டும். அதனை விரைவில் செய்வோம் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மேலும், கிளிநொச்சி வைத்தியசாலையில் மின்பிறப்பாக்கி இயங்காத விடயம் தொடர்பில் அமைச்சருக்கு சுட்டிக்காட்டப்பட்டது. இதற்கு பதிலளித்த அமைச்சர் உடனடியாக சுகாதார அமைச்சுக்கு தகவல் வழங்கி விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (அ)

## யாழ். நகரில்...

காட்டுமாறு வெளிநாட்டு முகவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதனை நம்பிச் சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் ஆரியகுளம் பகுதிக்குச் சென்ற இளைஞனைக் காரில் கடத்திய குறித்த குழு இளைஞரின் வங்கிக் கணக்கில் இருந்த 80 இலட்சம் ரூபாய் வரையான பணத்தை மற்றுமொருவரின் வங்கிக் கணக்குக்கு மாற்றிவிட்டு இளைஞரை கோப்பாய் பகுதியில் இறக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட இளைஞர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை பதிவு செய்தார்.

சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட பொலிஸார் பணம் மாற்றப்பட்ட வங்கி கணக்குக்கு உரித்தான பெண்ணொருவரை கைது செய்ததுடன் கடத்தலில் ஈடுபட்ட மேலும் மூவரை கைது செய்தனர்.

இந்நிலையில் குறித்த பெண்ணின் வங்கி கணக்கில் இருந்து பணம் வேறொரு வங்கி கணக்குக்கு மாற்றப்பட்டுள்ள நிலையில் பணத்தை மீட்பது தொடர்பாக பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட கார் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. கைதான நால்வரையும் யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

## இலங்கைக்கு...

தெரிவித்துள்ளன.

ஜனாதிபதி ஸி ஜின்பிங்கின் அமைச்சரவையில் முக்கிய உறுப்பினரான பான் யூ சீனாவின் சிறுபான்மை விவகாரங்களை கையாளும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

அவர் கடந்த ஆண்டு ஜூன் மாதம் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவின் முழு உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டார். தமது ஒரு வார கால அதிகாரபூர்வ விஜயத்தில், சீன அமைச்சர் நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சு மற்றும் புத்தசாசனம், மத மற்றும் கலாசார விவகார அமைச்சகத்தின் அதிகாரிகளுடன் பேச்சு நடத்த உள்ளார். (அ)

## நுரைச்சோலை...

இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

நீர் மின்னுற்பத்தியின் ஊடாக தொடர்ச்சியாக மின் விநியோகத்தை முன்னெடுக்க முடியும் என எதிர்பார்ப்பதாக வலுசக்தி அமைச்சர் பொறியியலாளர் குமார ஜயக்கொடி தெரிவித்துள்ளார். (அ)

## பாலச்சந்திரன்...

அவர் தவறுதலாக உயிரிழந்தார். இது பற்றி பல்வேறு கதைகள் உருவாக்கப்பட்டன. உண்மையில், இந்த மரணம் வேண்டுமென்று நிகழ்ந்த ஒன்று அல்ல, அது தவறுதலாக நடந்த சம்பவம்" என விளக்கமொன்றை நாமல் முன்வைத்துள்ளார்

மேலும், அந்த செய்தி அதிகாலையில் கிடைத்தபோது, முன்னாள் ஜனாதிபதி மிகவும் கவலை அடைந்ததாகவும், தான் அவரை இவ்வளவு மனவருத்தத்துடன் பார்த்தது அந்த தருணத்தில் மட்டும் தான் எனவும் தெரிவித்த நாமல் ராஜபக்ஷ, அந்தக் காலகட்டத்தில் நடந்த பல சம்பவங்களில், தனது தந்தைக்கு மிகுந்த வேதனை அளித்த ஒன்று பாலகன் பாலச்சந்திரனின் உயிரிழப்பு என அவர் குறிப்பிட்டார்.

இதுபோன்ற சம்பவங்கள் போரின் வேகத்தில் தவறுதலாக நடந்திருக்கலாம் என்பதையும் பாலச்சந்திரன் சுட்டுக்கொல்லப்பட்டார் என்பது தொடர்பாக நிலவிவரும் கருத்துகள் நிஜம் இல்லை என்பதையும் நாமல் வலியுறுத்தினார். (அ)

## பழைய பாணி...

விக்ரமரத்னவின் தலைமையில் அவிசாவளையில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று நாட்டில் மக்களை வாழ வைக்க முடியாத அரசாங்கமே காணப்படுகின்றது. மலிவு விலையில் தேங்காய் அரிசி மற்றும் உப்பு வாங்க முடியாத நிலை நாட்டில் ஏற்பட்டுள்ளது.

அத்தியாவசிய உணவுப் பொருட்களை வழங்கமுடியாத அரசு எவ்வாறு மக்களை வாழ வைக்கப்போகிறது என்ற விடயத்தில் பிரச்சினை காணப்படுகிறது. தற்போது ஆட்சியில் இருப்பவர்கள் எதிர்க்கட்சியில் இருந்தபோது நெல்லுக்கு 150 ரூபா உத்தரவாத விலையைத் தருவதாகக் கூறினர். ஆனால், இன்று அவர்கள் வயல்வெளிகளுக்குச் சென்று விவசாயியை சந்திப்பதற்கே பயப்படுகின்றனர்.

இவ்வாறான பொய்களை சொல்லி மக்களை ஏமாற்றும் செயல்களில் ஈடுபட்டு, ஆட்சிக்கு வந்த பின்னர் விவசாயிகளை கைவிட்டுள்ளனர்.

இன்று அரச உத்தியோகத்தர்கள் விருப்பத்தின் பேரில் இடமாற்றம் செய்யப்பட்டு அவர்களுக்கு ஆதரவானவர்கள் மாத்திரம் பாதுகாக்கப்பட்டு வருகின்றனர். இந்நாட்டு மக்களை நிர்க்கதியாக்கும் அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு எதிராக முன்நிற்பது மட்டுமன்றி பாரபட்சம் மற்றும் அரசியல் பழிவாங்கல்களுக்கு ஆளாவோருக்கு நீதியை நிலைநாட்டும் வேலைத்திட்டமொன்றை ஐக்கிய மக்கள் சக்தி முன்னெடுக்கும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பெரும்பான்மையான மக்கள் இன்று கடன் சுமைக்கு ஆளாகியுள்ளனர். நலமாக வாழ்ந்த மக்களின் வாழ்வாதாரம் வீழ்ச்சி கண்டுள்ளன. உற்பத்தி, நுகர்வு, முதலீடு என்பன குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றன. தங்கத்தை அடகு வைத்து விவசாயிகள் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்தாலும் உரங்களுக்கு நிலையான விலை வழங்கப்படவில்லை. இதனால் அவர்கள் கடன் சுழற்சியில் மீண்டும் சிக்கியுள்ளனர். கூட்டுறவு சங்கங்களில் இருந்து கடன் வாங்குவது அதிகரித்து காணப்படுகின்றன. இவர்களின் வருமான மூலங்கள் சுருங்கிப் போயுள்ளன-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## இந்திய மீனவர்கள் 14 பேர் நேற்று அதிகாலை கைது!

யாழ்ப்பாணம், பெப். 10

நெடுந்தீவு கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன் பிடித்த 14 இந்திய மீனவர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

14 இந்திய மீனவர்களும் இரண்டு ட்ரோலர் படகுகளில் இழுவை மடியில் ஈடுபட்ட சமயம் கைது செய்யப்பட்டதோடு படகுகளும் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் காங்கேசன்துறை கடற்படைத் தளத்துக்கு அழைத்து வரப்பட்டனர். (அ)

## வெளிநாட்டு பணவனுப்பல் 17 வீதத்தினால் அதிகரிப்பு!

கொழும்பு, பெப். 10

கடந்த ஜனவரி மாதத்தில் வெளிநாட்டு பணவனுப்பல் 573 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இது கடந்த ஆண்டு ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் 17 சதவீதம் அதிகரிப்பாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஜனவரியில் வெளிநாட்டு பணவனுப்பல் 487.6 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## தொலைபேசியே சின்னம்; சஜித் தரப்பு திட்டவட்டம்

கொழும்பு, பெப். 10

கடந்த சில நாட்களாக ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசியக் கட்சியும் உள்ளூராட்சித் தேர்தலில் இணைந்து போட்டியிடுவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன.

எனினும், தலைமை மற்றும் சின்னம் குறித்து விவாதித்த போதிலும், தொலைபேசியைத் தவிர வேறு எந்த சின்னத்திலும் தங்களுக்கு உடன்பாடு இல்லை என்று ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தெரிவித்துள்ளதாகத் கூறப்படுகிறது.

எதிர்வரும், உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட ஒரு பொதுவான கூட்டணியின் கீழ் வருவது குறித்து இரு கட்சிகளின் செயற்குழு உறுப்பினர்களும் அண்மைய நாட்களில் பல சுற்று விவாதங்களை நடத்தியுள்ளனர்.

கலந்துரையாடலின்போது ஐக்கிய தேசியக் கட்சி தொலைபேசியைக் கைவிட்டு பொதுவான சின்னத்தின் கீழ் போட்டியிட முன்மொழிந்ததாகக் கூறப்படுகிறது.

மேலும், ஐக்கிய மக்கள் சக்தி கட்சி தொலைபேசியைக் கைவிட்டு போட்டியிட விருப்பமில்லை என்று தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது. (அ)

## திசைகாட்டிக்கு வாக்களித்த மக்கள் கடும் விரக்தி நிலை!

### திலித் ஜயவீர சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 10

திசைகாட்டி அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டு வர வாக்களித்தவர்களில் பெரும்பாலானோர் தற்போது அரசாங்கத்தின் மீது விரக்தியடைந்துள்ளதாக சர்வஜன அதிகாரத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான திலித் ஜயவீர தெரிவித்துள்ளார்.

பொலநறுவையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்த அவர், திசைகாட்டிக்கு வாக்களித்தவர்களுக்கு சரியான விடயங்களை விளக்கினால் அவர்கள் தங்களுடன் இணைந்து கொள்வார்கள் எனவும் கூறினார்.

அத்துடன் திசைகாட்டிக்கு உதவிய தனது நண்பர்கள் பலர் இன்று திசைகாட்டியில் இல்லை எனவும் அவர்கள் அரசாங்கத்தின் மீது விரக்தியடைந்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில், திலித் ஜயவீர நேற்று முன் தினம் காலை அனுராதபுரம் புனித தலத்துக்கு சென்றிருந்ததோடு, ருவன்வெலி மகாசேயவில் வழிபாடுகளையும் மேற்கொண்டார். (அ)

# யோஷித ராஜபக்ஷ கைது அரசியல் பழிவாங்கலல்ல!

### நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார விளக்கம்



கொழும்பு, பெப். 10

நாங்கள் யாரையும் அரசியல் ரீதியாக பழிவாங்க விரும்பவில்லை. நாங்கள் யோஷித ராஜபக்ஷவை கைது செய்தபோது, சமூக ஊடகங்களில் ஏராளமான பொய்யான கதைகள் உருவாக்கப்பட்டன என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சட்டமா அதிபர் கூறுவதுபோல் ஒரு நபர் மீது குற்றஞ்சாட்டப்படுவதற்கு முன்பு, அவர் முதலில் சந்தேகநபராக பெயரிடப்பட வேண்டும்.

ஒருவரைக் கைது செய்யாமல் சந்தேக நபராகப் பெயரிட முடியாது. யோஷித ராஜபக்ஷ தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை அதுதான்.

ஒருவருக்குப் பிணை வழங்கப்பட்டால், குற்றச்சாட்டுக்களில் இருந்து அவர் விடுவிக்கப்பட்டு விட்டார் எனக் கூற முடியாது. ஆனால் நமது மக்களுக்கு நீதிமன்ற நடவடிக்கைகள் குறித்த அறிவு இல்லாததால் ஒருவர் பிணையில் வெளிவரும்போது அவர்கள் வழக்கில் இருந்து முற்றிலும் விடுவிக்கப்பட்டதாக நினைக்கின்றார்கள். அதனால்தான் எம்மீது விமர்சனங்களை முன்வைக்கின்றனர்.

குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும். இதில் எமது தலையீடுகள் எதுவும் இருக்காது. ஆனால், இவற்றை அரசியல் பழிவாங்கல் என்று காண்பிப்பதற்கு சிலர் முயற்சிக்கின்றனர். இது அரசியல் பழிவாங்கல் அல்ல.

சட்டச் செயற்பாடுகளில் நாம் எவ்வித அழுத்தங்களையும் பிரயோகிப்பதில்லை. கடந்த காலங்களில் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா போன்றவர்கள் விடயத்தில் முன்னைய அரசாங்கம் எவ்வாறு நடந்து கொண்டது என்பது நாம் அனைவரும் அறிந்த விடயம். ஆனால் எமது அரசாங்கம் அவ்வாறு நடந்து கொள்ள வேண்டிய எந்தத் தேவையும் இல்லை.

விசாரணைகளில் யாராவது குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டால் குற்றப்பத்திரம் தாக்கல் செய்து தொடர்புடைய சட்ட நடவடிக்கை எடுப்பது சட்டமா அதிபரின் வேலை- என்றார். (அ)

## போதை மாத்திரைகளுடன் யாழில் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், பெப். 10

கொழும்புத்துறையில் நீண்ட காலமாக போதை மாதித்திரைகள் விற்பனையில் ஈடுபட்டுவந்த சந்தேகநபர் ஒருவர் 20 போதை மாத்திரைகளுடன் நேற்று ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## கஞ்சா செடிகளுடன் சந்தேகநபர் கைது!

கொழும்பு, பெப். 10

கோனகங்கார பொலிஸ் பிரிவில் கடந்த 5 நாட்களாக பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது கஞ்சா பயிரிடப்பட்ட தோட்டங்களிலிருந்து 32 ஆயிரத்து 380 கஞ்சா செடிகளுடன் சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாளிகாவில பகுதியைச் சேர்ந்த 57 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும், அதே பகுதியில் 4 ஏக்கர் நிலப்பரப்பில் 2 கஞ்சா தோட்டங்களில் பயிரிடப்பட்ட 116,230 கஞ்சா செடிகள் அழிக்கப்படடன.

## துப்பாக்கியுடன் மாயமான பொலிஸ் உத்தியோகத்தர்!

கொழும்பு, பெப். 10

பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் அவரது ரி-56 துப்பாக்கியுடன் காணாமல் போயுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. குறித்த சம்பவம் தொடர்பாக தீவிர விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

துப்பாக்கியுடன் கான்ஸ்டபிள் காணாமல் போனது தொடர்பாக புதிய தகவல்கள் வந்துள்ளன. பொலிஸ் ஊடக செய்தித் தொடர்பாளர் தெரிவித்ததன்படி, குறித்த கான்ஸ்டபிள் டுபாய்க்கு தப்பிச் சென்றதாக தகவல் கிடைத்துள்ளது.

இந்த சம்பவம் குறித்து பொலிஸ் அதிகாரிகள் விரைவில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக கூறப்படுகின்றது. (அ)

## யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் கிறிஸ்தவ தேவாலயம்

யாழ்ப்பாணம், பெப். 10

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் அமைக்கப்பட்ட கிறிஸ்தவ தேவாலயம், யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக கிறிஸ்தவ மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கிறிஸ்தவ மாணவர்களின் வழிபாட்டுக்காக தேவாலயம் நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தவர் பேராசிரியர் சிறீ சற்குணராஜா, பீடங்களின் பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள் பங்குத்தந்தையர்கள், பங்குகளின் மக்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர். (அ)

# “43 எம். பிக்கள் பெற்றுக்கொண்ட நட்டஈட்டை மீளப் பெறவேண்டும்”

கொழும்பு, பெப். 10

நாட்டின் அசாதாரண நிலையின் போது வீடுகள் சொத்துக்கள் சேதமாக்கப்பட்டதாகத் தெரிவித்து 43 பாராளுமன்ற உறுப்பினர்கள் பெற்றுக்கொண்ட நட்டஈட்டை மீளப்பெற்றுக்கொள்ள வேண்டும். இது நாடு என்ற வகையில் செலுத்த வேண்டிய நட்டஈடு அல்ல. அது அவர்கள் செய்த விடயங்களுக்கு கிடைத்த பலனாகும் என தொழில் கல்வி பிரதி அமைச்சர் நளின் ஹேவகே தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்-

அரசாங்கம் பொறுப்பேற்று 70 நாட்களே கடந்துள்ளன. இந்த அரசாங்கம் மீது மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். இருப்பினும் ஒரு சிலர் அரசாங்கத்துக்கு எதிராக சூழ்ச்சிகளை முன்னெடுத்துள்ளனர். அவர்களது ஊழல் மோசடி தொடர்பில் விடயங்கள் வெளிக்கொணரும்போது அரசாங்கத்துக்கு எதிராக சதி முயற்சிகளை மேற்கொள்கிறனர்.

எதிர்வரும் நாட்களில் சிலர் கைது செய்யப்படலாம். இதற்கு அச்சம் கொண்டுள்ள ஒரு தரப்பு எம்மை இலக்கு வைத்து சில விடயங்களை அரங்கேற்றிக் கொண்டிருக்கிறார்கள். எவ்வாறாயினும் இந்த அரசாங்கம் தொடர்பில் மக்களிடத்தில் தெளிவு உள்ளது. மக்கள் பொறுமையுடனேயே இருக்கிறார்கள். எனவே எமக்கு வழங்கப்பட்ட காலப்பகுதிக்குள் மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காண்போம்.

இந்த நட்டஈடு அனைத்துக்கும் எதிர்காலத்தில் சரியாக வழக்கு தொடுத்து அதனை இரட்டிப்பாக அல்லது மும்மடங்காக அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.இது நாடு என்ற வகையில் செலுத்த வேண்டிய நட்டஈடு அல்ல. அது அவர்கள் செய்த விடயங்களுக்கு கிடைத்த பலனாகும்.எனவே எதிர்காலத்தில் சரியாக வழக்கு தொடர்ந்து நட்டஈட்டை இரட்டிப்பாக அல்லது மும்மடங்காக அவர்களிடமிருந்து அறவீட வேண்டும் - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10. 02. 2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org